


# தமிழரசு

1-5-77 50காசு.



# தீண்டாமை ஒழிப்பு

''பிறப்பினுல் தீண்டத்தகாதவன் என்று கருதப்படும் கடைசி மனிதன் இருக்கும் வரை நமது போராட்டம் ஓயப் போவதில்லை''

"காந்தி அடிகள்"



''ஜாதி மதங்களைப் பாரோம்—
உயர் ஜன்மம் இத்தேசத்தில்
எய்தினராயின் வேதிய ராயினும்
ஒன்றே—அன்றி வேறு
குலத்தின ராயினும் ஒன்றே''

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே
—நம்மில் ஒற்றுமை நீங்கில்
அனைவர்க்கும் தாழ்வே நன்றிது
தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்
நமக்கெது வேண்டும்?''

"மகாகவி பாரதியார்"

# தமிழரசு


மலர் : 7 இதழ் : 21

1—5—1977


## இந்த இதழில்


| | பக்க எண் |
|---|---|
| மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் திட்டமிட்டுச் செயல்படுத்துவோம்! —பிரதமர் உரை .. | 2 |
| மக்களின் முதல் தொண்டனாகப் பணி புரிவேன்! —ஆளுநர் உரை .. | 6 |
| உணவாய் — மருந்தாய் உதவிடும் பதநீர்! .. .. .. | 9 |
| இந்திய இரயில்வேக்களின் வளர்ச்சி .. | 13 |
| சுற்றுலாக் கொள்கையின் புதிய கண்ணோட்டம் .. .. | 17 |
| சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம் .. .. .. | 18 |
| வீட்டுக்கொரு இயங்கு எரிவாயு சாதனம் அவசியம் .. .. | 19 |
| படமும் செய்தியும் .. .. | 22 |
| மஞ்சளோ மஞ்சள்! .. .. | 32 |
| தமிழ்நாடு சமூகநலக் குழுவின் சீரிய பணிகள் .. .. .. | 33 |
| 'பாலாகார்' .. .. .. | 37 |
| கொள்ளை இலாப நோக்கு சமூக விரோதப் போக்கு! .. .. | 42 |
| உயர் விளைச்சல் நெல் சாகுபடியில் புதிய விஞ்ஞான முறைகள் .. .. | 44 |
| முந்திரியைத் தாக்கும் கொடிய நோயும் பூச்சிகளும் .. .. | 46 |
| குறைந்த செலவில் சிறந்த தீவனங்கள்! .. | 47 |


கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.



## அடுத்த இதழ்

நாவல் இலக்கியத்தின் முடிசூடா மன்னர் சரத் சந்திரரின் நூற்றாண்டு விழாவையொட்டி, **சரத் சந்திரர் சிறப்பிதழாக** வெளி வருகிறது. சரத் சந்திரரின் நாவல் ஒன்றும் சுருக்கமாக வெளி வருகிறது.

# மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் திட்டமிட்டுச் செயல் படுத்துவோம்!

"நண்பர்களே, இந்த நாட்டில் திட்டமிடும் முறையை ஜவஹர்லால் நேரு துவக்கி வைத்தது இந்த நாட்டின் சேவைக்கான பெரும் பணி. ஆனால் இங்குத் துவக்கப்பட்ட திட்டமிடும்முறை அது என்ன சாதித்திருக்க வேண்டுமோ, அதனைச் சாதிக்கவில்லை. **திட்டமிடுதல் சிறந்ததுதான். ஆனால் திட்டமிடுதல் தடம்புரண்டு போனால் அது நல்லதை விடக் கெட்டதையே அதிகம் விளைவிக்கிறது.** எனது சகா (திரு சரண் சிங்) அவரது விளக்கத்தின்படி வைதீகமில்லாத கருத்துக்களை உங்கள் முன் வைத்தார். ஆனால் அந்தக் கருத்துக்கள் வைதீக மற்றவைகளாக ஆகிவிட்டன. ஏனென்றால் தவறான விஷயங்கள் வைதீகமாகிவிட்டன. நல்ல விஷயங்கள் வைதீக மற்றவைகளாக ஆகிவிட்டன. அவரது கருத்தை நானும் கணிசமான அளவுக்கு ஒப்புக் கொள்கிறேன். இந்தக் கருத்துக்களை உங்கள் முன்னால் வைத்ததன்மூலம் எனது பணியைக் குறைத்தமைக்காக நான் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். இதனால் அவர் கூறிய அதே விஷயங்களை நான் மறுபடியும் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

நாம் எந்த ஒரு முன்னேற்றமும் அடையவில்லை என்று என்னால் கூற முடியாது. நாம் சுதந்தரம் பெற்றபோது ஓர் ஊசியைக் கூட இந்த நாட்டில் நாம் தயாரிக்கவில்லை. நூல் நூற்கும் சக்கரத்தின் ஆணியைக் கூட நாம் இறக்குமதி செய்ய வேண்டியதிருந்தது. அந்த நிலைமை மாறிவிட்டது. எஃகு, அலுமினியம் அல்லது ரயில்வே அல்லது சர்க்கரை ஆலைக்கான யந்திரங்கள் அல்லது மின்சார யந்திரங்கள் ஆகியவற்றுக்கான சாதனங்களை நாம் உற்பத்தி செய்வது மட்டுமின்றி எஃகு ஆலைகளையும் கூட நம்மால் தற்போது நிர்மாணிக்க முடியும். கனரக யந்திரத் தொழிலில் இந்த முன்னேற்றங்கள் காணப்பட்டாலும் கூட இன்றைக்கு நமக்குள்ள அதிருப்தி நாம் சுதந்தரம் பெற்றபோது இருந்த அதிருப்தியைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கிறது. சில பிரிவு மக்களிடையே செழிப்பு அதிகரித்திருந்தாலும் கூட, மேல் நிலையிலுள்ள மக்கள் அடைந்துள்ள முன்னேற்றத்துடன் ஒப்பிடுகையில் அந்தச் செழிப்புப் போதுமான அளவில் அல்லது உணரக்கூடிய அளவில் கூட அதிகரிக்கவில்லை. அந்த மக்களிடையே பெரும் ஏமாற்றம் நிலவுகிறது. ஏனென்றால் அவர்கள் எதிர்பார்த்தது எனது கருத்துப்படி அது அதிகமில்லை என்றாலும், நிறைவேறவில்லை.

## பிரதமர் உரை

இந்த இடத்தில்தான், இந்த அதிருப்திகளைப் போக்கக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதில் திட்டமிடுதல், வெற்றி பெறவில்லை. திருப்தி உணர்வை மட்டுமின்றி மிகுந்த நம்பிக்கையோடும் மிகுந்த திறமையோடும் நமது பிரச்சினைகளைச் சமாளிக்கக்கூடிய வகையில், நம்பிக்கையையும், தைரியத்தையும் உருவாக்குவதில் திட்டமிடுதல் வெற்றி பெறவில்லை. குறிப்பாக ரயில்வே சாதனங்கள் அல்லது மின்சார யந்திரங்கள் அல்லது மற்ற யந்திரங்கள் அல்லது இவைகளுக்குத் தேவையான எஃகு, அலுமினியம் உலோகங்கள் போன்ற பண்டங்களைத் தயாரிப்பதற்கு கனரகத் தொழில்கள் ஓரளவுக்குத் தேவை.

ஏழை மக்களுக்கு மட்டுமின்றி சமுதாயத்தின் ஒவ்வொரு நபருக்கும் மிகவும் அத்தியாவசியமான நுகர்வோர் பண்டங்களை கனரகத் தொழில் துறையில் உற்பத்தி செய்வது சிக்கனமானது அல்ல. பெரிய தொழில்கள் மூலம் உற்பத்தி செய்வதைக் காட்டிலும் மிகவும் சௌகரியமாக, மிகவும் எளிதாக, மிகவும் குறைந்த முதலீட்டில் சிறு தொழில்கள் மூலமும் குடிசைத் தொழில்களின் மூலமும், நுகர்வோர்க்கான பண்டங்களை உற்பத்தி செய்யலாம். இது மிகவும் பிரச்சினையான விஷயம். இதை ஒப்புக் கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். கனரகத் தொழிலில் ஒரு தொழிலாளியை அமர்த்திக் கொள்வதற்கு 25 ஆயிரம் ரூபாய் முதல், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை முதலீடு தேவைப்படுகிறது. குடிசைத் தொழிலில் ஒரு தொழிலாளியை வேலைக்கு அமர்த்திக் கொள்வதற்கு 500 ரூபாய்க்கு மேல் தேவைப்படாது. அநேக விஷயங்களில் இது அதற்கும் குறைவாகவும் இருக்கும்.

நமது நாட்டில் வேலை வாய்ப்பு பிரச்சினை மிகவும் மோசமான பிரச்சினை. ஏனென்றால் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்க்காமல் நமது மக்களிடையே மகிழ்ச்சியை நிலவச் செய்ய நம்மால் முடியாது. ஆகவேதான் தொழில்கள் வளர்ந்திருந்தாலும் கூட வேலையின்மை வளர்ந்துள்ளதே தவிரக் குறையவில்லை. இந்த உண்மையைவிட வேறெந்த நடைமுறை அத்தாட்சியும் தேவைப்படாது என்று நான் நினைக்கிறேன். படித்தவர்களிடையும்கூட வேலையின்மை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இந்த நிலைமை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இவையெல்லாம், முன்னுரிமைகள் சம்பந்தமாகவும் வழிமுறைகள் சம்பந்தமாகவும், திட்டமிடுதலுக்கான போக்கில் மாற்றம் காண்பதில் முழு கவனம் தேவை என்பதையே குறிக்கின்றன. மேற்கத்திய நாடுகளையும் அந்த நாடுகளின் நாகரிக முறைகளையும் நாம் பின்பற்றத் துவங்கியதால்தான் இவை எல்லாம் நடந்தன. அவர்களுக்கு அந்த முறைகள் நல்லது. ஆனால் நமக்கு அந்த முறைகள் நல்லவைகள் அல்ல. அவைகளில் நல்லவைகளை எல்லாம் நாம் நிச்சயமாக எடுத்துக் கொள்வோம். எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். "நாம் எல்லாவற்றையும் அறிந்திருக்

கிறோம்; நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை ஒன்றுமில்லை'' என்று நாம் நினைக்கக் கூடாது. ஒவ்வொருவரிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளமிருக்கிறது. **மிகப் பெரிய அறிவாளிகூடச் சில நேரங்களில் ஒரு குழந்தையிடமிருந்து கூட கற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும்.** இந்த உலகத்திலிருந்து நாம் ஒன்றும் கற்றுக் கொள்ளவில்லை என்று நாம் கூற முடியாது. இந்த உலகம் முழுவதிலுமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளமிருக்கிறது. நாம் எதைக் கற்றுக் கொண்டாலும், அவைகள் நமது கலாச்சார அடிப்படைகள், சமுதாயம் மற்றும் நமது பாரம்பரியத்தின் தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்ததாக இருக்க வேண்டும். இதனை நாம் பெரும்பாலும் மறந்து விட்டோம். இது நம் அனைவரின் மிகப் பெரும் துரதிருஷ்டம். இதனை நாம் போக்க வேண்டும். நமது சொந்த அடிப்படைக் கலாச்சாரத்திலும், நமது சொந்த வாழ்க்கை முறையிலும் இந்தப் பெருமையை நாம் திரும்பப் பெற்றாலன்றி நாம் எவ்விதப் போக்கினைக் கொண்டிருந்தாலும் அது தவறாக இருக்கும் என்று நான் அஞ்சுகிறேன். சரியான போக்குடன், சரியான நோக்கில் சரியான வழியில் மேற்கொள்ளப்பட்டால்தான் எந்தப் பெரும் பணியும் வெற்றி பெற முடியும். ஒரு பெரும் பணியை குறைந்த உழைப்பில், குறைந்த பணச் செலவில் சரியான பொருட்களை உற்பத்தி செய்கிறோம் என்பது மட்டுமின்றி அந்தச்செயலைச்செய்வதன் மூலம் அதிகபட்ச மன நிறைவைப் பெறும் சக்திதான் திறமை என்று கூறப்படுகிறது. இந்தப் பின்னணியில் நீங்கள் எந்தப் பெரும் பணியை பரிசீலித்தாலும் ஒப்புக்கொள்ளாமல் இருப்பதற்கான எவ்வித வாய்ப்பும் காணப்படாது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நமது திட்டமிடும் முறை பெரும் பணச் செலவுக் கணக்கில்தான் நினைக்கப்படுகிறது. ஏனென்றால் கனரகத் தொழில்களைத்தான் மிக அதிகமாக நினைக்கிறோம். பாசன வசதி விஷயத்தில்கூட சிறிய பாசன வசதித் திட்டங்களை நாம் புறக்கணித்து விடுகிறோம். முதலில் நாம் அவைகளைத்தான் கவனித்து இருக்க வேண்டும். பெரிய பாசன வசதித்திட்டங்கள் தேவைதான். உண்மையிலேயே, சொல்லப் போனால் 15 ஆயிரம் ரூபாய் செலவில் நானும் ஒரு திட்டத்தை வைத்திருந்தேன். வடக்கிலும், தெற்கிலும் குறுக்கும் நெடுக்குமாக உள்ள கால்வாய்களுடன் இந்தியாவிலுள்ள நதிகளை எல்லாம் இணைத்து ஒரு நீர்வழிப்பாதையை ஏற்படுத்தலாம். இது ரயில்வே முறையைக் காட்டிலும் மிகவும் மலிவாகவும்



இருக்கும். இதனால் நாடு முழுவதும் எந்தவித பாசன வசதிக்கும் நீர்த் தட்டுப்பாடு இருக்காது. இத்தகைய திட்டத்தை நான் கருத்தில் கொண்டிருக்கிறேன்.

உண்மையில், கிழக்கு இந்தியக் கம்பெனியும், பிரிட்டிஷ் அரசாங்கமும் முதலில் ஒரு திட்டத்தை வைத்திருந்தன. ரயில் பாசனத் திட்டம் வகுக்கப்படுவதற்கு முன்பு நீர்வழிப் பாதையை மேம்படுத்துவது அல்லது போக்குவரத்துப் பாசன வசதிக்கும் நீர்வழிப் பாதையைப் பயன்படுத்துவது என்ற திட்டம் இருந்தது. ஆனால், இந்தத் திட்டத்தை மேற்கொண்டால் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்வது குறைந்துவிடும் என்பதை அவர்கள் கண்டறிந்தனர். ஆகவே அனைத்துப் பொருட்களையும் இறக்குமதி செய்யக்கூடிய ரயில்வேக்களுக்கு சாதகமாக அவர்கள் தீர்மானித்தனர்.

நல்லது. அவர்கள் நல்லதையே செய்திருக்கிறார்கள். அதில் சந்தேகமில்லை. மிகவும் அடிப்படை அவசியமான அவசியத்துக்கும் அதிகமாக ஒரு அடிக்கல்லான விவசாயத்தைப் புறக்கணித்ததன் மூலம் இந்த நாட்டுக்குக் கணிசமான அளவுக்கு அவர்கள் கெடுதல் செய்திருக்கிறார்கள். நமது விவசாயத்தை நாம் வளப்படுத்தினாலொழிய, நாம் செய்யும் எதுவும் நமக்கு மகிழ்ச்சியையோ மன நிறைவு உணர்வையோ அளிக்கப் போவதில்லை, என்று நான் அஞ்சுகிறேன். கடந்த ஓரிரு ஆண்டுகளைத் தவிர நமது தேவைகளுக்கு ஏற்ப, போதுமான அளவுக்கு இன்னும் நம்மால் உற்பத்தி செய்ய முடியவில்லை. கடந்த ஓரிரு ஆண்டுகளில் உற்பத்தி செய்ததுகூட சிறந்த பருவமழைகள் இருந்ததால்தான். நாம் இந்தப் பருவமழைகளை நம்பி இருக்க வேண்டிய அவசியமில்லை. எனது கருத்துப்படி நாம் போதுமான வளங்களைப் பெற்றிருக்கிறோம். தற்போது நமது நாட்டில் சராசரியாக உற்பத்தியாவதைக் காட்டிலும் மூன்று மடங்கு அல்லது அதற்கு அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய வளம் நமது நாட்டின் மண்ணிற்கு உண்டு. இன்றைய தினம் உற்பத்தி செய்வதைக் காட்டிலும் இரு மடங்கு உற்பத்தி செய்வோமானால் என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அதிருப்தி இருக்காது என்பது மட்டுமின்றி தற்போது வளங்களைத் தேடி அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கிறோம். அந்த வளங்களும் நமக்குக் குறைவிருக்காது. தற்போது நமது நாட்டின் மொத்த விவசாயிகளில் 70 சத விகிதத்தினராக உள்ள சிறு விவசாயிகள் அவர்கள் உற்பத்தி செய்ய வேண்டிய அளவுக்குப் போதுமான அளவில் உற்பத்தி செய்வதில்லை.

ஏனென்றால் பெரிய யந்திரங்கள், உரங்கள், நவீன விவசாய முறைகள் என்பனவற்றில் அவர்களது கவனம் திருப்பப்பட்டது. நமக்கு எவையெல்லாம் நல்லவையோ அவற்றை நவீனமுறையில் நாம் பயன்படுத்தலாம். நாம் அந்த நவீன முறைகளை எடுத்துச் கொள்ளலாம். ஆனால் நமது சொந்த வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நாம் மறந்துவிட முடியாது. நாம் வயலில் இறங்கி உற்பத்தியைப் பெருக்க முடியாது. விவசாயிகள்தான் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்வதற்கான வசதிகளை நாம் அவர்களுக்கு அளிக்கவேண்டும். தற்போது இது கருத்தில் கொள்ளப்படவில்லை. அதனால்தான் பெரிய விவசாயப் பண்ணைகள் விஷயத்தில் எனது சகா குறிப்பிட்டார் என்று நான் நினைக்கின்றேன்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் பம்பாயில் விவசாய இலாகாவின் பொறுப்பினை வகித்து வந்தபோதுஅரசுப் பண்ணைகளின் முறையை நான் மாற்றினேன். அந்தக் காலத்தில் அவைகள் அதிகமாக இல்லை. ஐம்பது, நூறு அல்லது இருநூறு ஏக்கர்களுக்கு மேல் அவைகள் இல்லை. ஆனால் அவைகளை நான் மாற்றி, மற்றவர்கள் அவைகளைப் பார்த்து விரைவாகப் பின்பற்றக்கூடிய வகையில் மிக்வும் நல்ல விவசாயிகள் கொண்ட மாதிரிப் பண்ணை முறையை நான் வகுத்தேன். தற்போது எந்த விவசாயி பெரிய அரசுப் பண்ணையில் பின்பற்றப்படும் முறையைப் பின்பற்ற முடியும்? ஆகவே அவை எந்த விதத்திலும் விவசாய சமுதாயத்துக்கு உதவுவதில்லை. தற்போது இந்த விஷயங்களை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். **இதே முறையில் குடிசைத் தொழில்கள் நமது அனைத்துத் திட்டங்களின் முதுகெலும்பாக இருக்க வேண்டும்.** இத்துறையில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இவைகள் இரண்டாம் பட்ச நடவடிக்கைகளாக எனது கருத்துப்படி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பயனாக, இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தேவையான, விரும்பிய பலன்களை அளிக்கவில்லை.

இவை அனைத்தும் உங்களைப் போன்ற திட்டமிடுவோர்கள் மற்றும் அவற்றை அமல்படுத்துபவர்களையும் பொறுத்தது. அமல்படுத்தும் பொறுப்பை ஏற்பவர்கள் நீங்கள். அதுமட்டுமல்ல திட்டங்கள் எப்படி இன்னும் நேர்த்தியாக இருக்கலாம் என்பதற்கு யோசனை கூறுபவர்களும் நீங்கள். அப்படிப்பட்ட யோசனைகள் இதுவரை பெறப்படவில்லை என்று நான் கருதுகிறேன். அவைகளும் ஊக்குவிக்கப்படவில்லை. நான் உங்களிடம் தவறு காணவில்லை.


இந்த பூமியில் எங்குப்பார்த்தாலும் அச்சம் தலைதூக்கியிருக்கிறது யாராவது ஒருவர் ஒரு புதிய கருத்தையோ யோசனையையோ வெளியிட்டால் அதற்காக அவர் இடர்ப்படுகிறார். அதனால் அவர் லாபம் அடைவதில்லை, பாராட்டப்படுவதும் இல்லை. எல்லாப் பிரிவினரிடத்திலிருந்தும் இந்த அச்ச உணர்வை நாம் நீக்கியாக வேண்டும். அனைத்துப் பிரிவினரிடமிருந்தும் இந்த அச்ச உணர்வை நீக்க வேண்டுமானால் அதைச் செய்ய வேண்டியது அரசாங்கமே. அரசாங்கத்தின் கருவிகள் நீங்கள். மேலும் மக்களின் சேவகர்களும் நீங்கள். அச்ச உணர்விலிருந்து நீங்கள் விடுபடாதவரையில் சாதாரண மனிதனை அதிலிருந்து நீங்கள் எப்படி விடுவிக்கப் போகிறீர்கள். **ஆகவே நீங்கள் அச்ச உணர்விலிருந்து விடுபட வேண்டும். அப்போதுதான் உங்களுடைய கருத்துக்களைச் சுதந்தரமாகவும் தெள்ளத் தெளிவாகவும் எடுத்துக் கூறமுடியும். அதே நேரத்தில் சிந்திந்துப் பார்க்கவும் முடியும்.**

நம்முடைய வளங்களை இயன்ற அளவுக்கு நாம் பயன்படுத்தியும், அளவுக்கு மீறி அதிகமாகச் செலவழித்தும் தவறு செய்திருக்கிறோம். இதன் விளைவாக இன்றைக்கு பற்றாக்குறை பட்ஜெட்டுக்கு வழி காணப்பட்டுள்ளது. விலைவாசிகளைப் பொறுத்தமட்டில் மோசமான காரியம், பற்றாக்குறை பட்ஜெட்டே. சப்ளையைக் காட்டிலும் அதிகமாக விலைகள் உயர்கின்றன. நுகர்வோர் பொருட்கள் உற்பத்தி விகிதத்திற்குச் சமமாகப் பண சப்ளை இருக்குமானால் அதனால் தீங்கு ஒன்றும் இல்லை. ஆனால் பண சப்ளை அதிகரித்துக் கொண்டே போக அதே நேரத்தில் உற்பத்தி விகிதம் குறைந்து கொண்டேபோனால் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரான திசையில் செயல்படுகின்றன. அதன் காரணமாகவேதான் விலைவாசி. உயர்வை நாம் காண்கிறோம். இவற்றை எல்லாம் பார்த்து நாம் நம்முடைய வழிகளைச் சிந்திக்க வேண்டும். இது நீங்கள் அனைவரும் உங்களுடைய முழுத் திறமையையும் பயன்படுத்தி ஒத்துழைத்தால் மட்டுமே சாத்தியமாகும். உத்தரவிடுவதால் மட்டும் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவேதான் இதனை நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் என்னிடமிருந்து கருத்து வேறுபாடு கொண்டிருப்பீர்களேயானால் அது குறித்து என்னிடம் கூறுவதற்கு உங்களுக்கு முழு உரிமையும் உண்டு. இது குறித்து நாம் பரிசீலித்து விரைவாக விவாதிக்க முடியும். ஒவ்வொரு கட்டத்திலும் திட்டமிடுவது இப்படித்தான் செய்யப்பட வேண்டும். மேலும் அது பூரணமாக அமல்படுத்தப்படுகிறதா என்பதையும் நீங்கள் பார்க்க வேண்டும்.

முழுவதும் அமல்படுத்தப்படாத எந்த ஒரு திட்டமும் அதைரியப்படுத்தப் படுவதாகும். ஊக்கப்படுத்துவதல்ல. தன்னுடைய இலக்குக்கும் மேலாக ஒரு திட்டம் நிறைவேற்றப்படுமேயானால் கூடுதல் நம்பிக்கைகளையும் நல்ல வலுவையும் நமக்கு அளிக்கிறது. அதே நேரத்தில் திட்டம் அளவுக்கும் அதிகமாகத் திட்டமிடப்பட்டுக் குறைவாகவே அமல்படுத்தப் படுமேயானால், அதன்பலன் கீழே போகும் சாதாரண வழக்கமான செயல்முறையாகிறது. நீங்கள் பரிசீலிக்க விரும்பும் சிலவற்றின் அடிப்படையான விஷயங்கள் இவை.

இந்த எண்ணங்களில்தான் நீங்கள் சிந்திக்கவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். கடந்த காலத்தில் இந்த எண்ணங்களில் நீங்கள் சிந்திக்கவில்லையானால் அது குறித்து நான் உங்களிடம் தவறு காணவில்லை. இப்போது மேற்படி சொன்ன எண்ணங்களில் நீங்கள் சிந்திக்கவில்லையானால் மட்டுமே நான் உங்களிடம் தவறு காண்பேன். நாம் அனைவரும் ஒருங்கிணைந்து நம்முடைய திட்டங்களில் ஒரு மாற்றம் காண்போம். அந்த மாற்றம் இணக்கமான ஒரு மாற்றமாக இருக்க வேண்டும். கடுமையான, பலாத்காரமான ஒரு மாற்றத்தை நாம் விரும்பவில்லை. இந்த மாற்றம் துரிதமாக இருக்க வேண்டும். சில நேரங்களில் நிர்வாகம் செய்யும் பல அரசாங்கங்களில் ஏற்படுவதைப்போல முடிவில்லாக் காலத்தில் மீண்டும் ஏற்படக் கூடாது. ஆகவே அது குறித்து ஓர் இலக்கை நீங்கள் நிர்வகிக்க வேண்டும். இதற்கேற்ப அடுத்த திட்டத்தில் நம்மை நாமே சரி செய்து கொள்வோம். மேலும் இந்த மாற்றம் நிகழ்ந்திருப்பதாகத் திட்டத்தின் இறுதியில் நாம் காண்போம்.

(41-ஆம் பக்கம் பார்க்கவும்)



திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள்

27—4—1977 அன்று

தமிழ்நாடு ஆளுநராகப் பதவி ஏற்றார்

# "மக்களின் முதல் தொண்டனாகப் பணி புரிவேன்!"

—பிரபுதாஸ் பட்வாரி

"நண்பர்களே,

வணக்கம். தமிழ்நாடு ஆளுநராக இன்று நான் பதவி ஏற்று இருக்கிறேன். தமிழ் நாட்டு மக்களின் நேர்மை, எளிமை, கடமை உணர்ச்சி, கடவுள் பக்தி எல்லாம் என்னை மிகவும் கவர்ந்து இருக்கின்றன. தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் நான் மிகவும் நேசிக்கிறேன். என் கடமையில் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கிறேன்.

அன்பார்ந்த


சகோதர சகோதரிகளே!

இன்று பிற்பகல், நான் தமிழ் நாடு ஆளுநராகப் பதவி ஏற்றிருக்கிறேன். என் மனத்தில் உள்ள எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டு உங்களிடம் உரையாற்ற வேண்டுமென்று எண்ணினேன். நமது நாட்டுக்கும் மக்களுக்கும் பணியாற்ற இந்தச் சிறந்த பதவியை எனக்குக் கிடைத்த மற்றொரு வாய்ப்பாகக் கருதுகிறேன்.

இன்று காலை நான் இங்கு வந்த பொழுது அளிக்கப்பட்ட அன்பான வரவேற்பு என்னை மிகவும் கவர்ந்தது. தமிழ்நாட்டு மக்களின் விருந்தோம்பும் பண்பையும், தோழமையையும் நான் அறிவேன். தமிழ்நாட்டு மக்கள் அளித்த வரவேற்பும், காட்டிய பரிவும் என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தின. உங்களுடைய அன்புக்கும் பாசத்துக்கும் என்னுடைய நன்றி.




சென்னை இராஜாஜி மண்டபத்தில் 27—4—77 அன்று நடைபெற்ற ஆளுநர் பதவி ஏற்பு விழாவில், சென்னை உயர்நீதி மன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதி திரு. ராமபிரசாத் ராவ் அவர்கள், ஆளுநராகப் பதவி ஏற்கும் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.



தமிழ்நாடு ஆளுநராகப் பதவி ஏற்க வருகை தந்த திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் அண்ணாசாலையில் உள்ள, அஞ்சலகத் தலைவர் அலுவலகத்திலிருந்து இரர்ஜாஜி மண்டபம் வரை குதிரைப்படை வீரர்கள் முன்னும் பின்னும் அணிவகுத்து வர ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

நமது நாட்டின் வரலாற்றில் ஒரு முக்கியமான கால கட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். அண்மையில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்கள் ஜனநாயகத்தின் மீது இந்திய மக்கள் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை சந்தேகத்திற்குஇடமின்றி நிரூபித்திருக்கின்றன. ஓர் உண்மையான மக்கள் நலச் சமுதாயத்தை உருவாக்க நாம் உறுதி பூண்டுள்ளோம்.

அத்தகையதொரு சமுதாயத்தில் ஒவ்வொரு குடிமகனுக்கும் பொறுப்புகளும் கடமைகளும் உண்டு. நமது நோக்கம் பொது நலத்திற்கான சம வாய்ப்புள்ள சுதந்தரமான சூழ்நிலையில் அச்சமின்றி எல்லா மக்களும் முழு வளர்ச்சி பெற உதவுவதேயாகும்.

நாம் அடைய விரும்பும் குறிக்கோளுக்கான நமது வழி முறைகள், தார்மீக அடிப்படை கொண்டனவாக இருக்க வேண்டும். நிர்வாகம் சாதாரண மனிதனின் நலத்திற்கும் நல்வாழ்விற்கும் உதவுவதாக இருக்க வேண்டும்.

இத்துடன் நமது கடமை முடிந்து விடுவதில்லை. இந்தச்

# ஆளுநர் உரை

சிறந்த மாநிலத்தின் முதல் மக்கள் ஊழியன் என்ற முறையில் என்னுடைய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் நமது நாட்டின் தந்தை மகாத்மா காந்தியடிகள் விட்டுச் சென்றுள்ள சீரிய கொள்கைகளைப் பின்பற்ற முயற்சி செய்வேன். தமிழ்நாடு தற்சமயம் குடியரசுத் தலைவர் ஆட்சியில் இருக்கிறது. மத்திய அரசாங்கத்திலுள்ள நமது தலைவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான தேர்தல்கள் விரைவில் நடைபெறுமென்று முன்பே அறிவித்துள்ளார்கள். சட்டப் பேரவைக்கும் அதன் மூலம் மக்களுக்கும் பொறுப்பான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை சீக்கிரமே பெறவிருக்கிறோம்.

குடியரசுத் தலைவர் ஆட்சியில், ஆளுநர்கள் நிர்வாகத்தின் தலைவராக இயங்குகிறார்கள். நான் ஏற்றுள்ள கடமைகளும் பொறுப்புகளும் மகத்தானவை.

இந்த மாநிலத்தின் பணியில் என்னுடைய கடமைகளை ஆற்றுவதில் உங்கள் உதவியையும், ஒத்துழைப்பையும் கோருகிறேன். தமிழ்நாட்டிற்கு ஆளுநர் என்ற முறையில் நான் புதியவன். ஆகவே இந்த மாநிலத்தின் பிரச்சினைகளுக்கு விடை காணுமுன் அவைகளை நான் நன்கு ஆய்ந்து அறிய வேண்டும். மத்திய அரசாங்கத்தில் உள்ள நமது தலைவர்கள் முன்னுரிமைகளையும், அணுகுமுறைகளையும் வகுத்துள்ளார்கள். ஆகவே நமது பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் நமது மக்கள் முன்னேற்றத்திற்கு உதவுவதிலும், அவைகளை நாம் பின்பற்றலாம். நமது பிரதமர், நாட்டின் வேலையில்லாப் பிரச்சினையைப் பத்தாண்டுகளுக்குள் அகற்ற உறுதியளித்து உள்ளார். ஆகவே, சிறப்பாக கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புகளைப் பெருமளவில் உருவாக்க, நமது பொருளாதாரத் திட்டங்களையும், முன்னுரிமைகளையும் மாற்றியமைக்க வேண்டும். நமது பிரதமர் கூறியுள்ளபடி, காந்தியடிகள் கண்ட அந்தியோதயம் அதாவது கடைநிலையில் உள்ளவரையும் கடைத்தேற்றுவது என்பது எட்ட முடியாத குறிக்கோள் அல்ல. அது பொருளாதார, சமூக ரீதியான அவசியமாகிவிட்டது. ஏழையென்றும் பணக்காரனென்றும் அல்லது நகர்ப்புறத்தைச் சார்ந்தவர், கிராமவாசியென்றும் இரு வகையான சமுதாயங்கள் இருப்பதால் எழக்கூடிய பிரச்சினைகள் விரைவாகவும் வலிவாகவும் தீர்க்கப்பட வேண்டும்.

தாழ்த்தப்பட்டோரும் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளோரும் நமது சிறப்புக் கவனத்துக்கு உரியவர்கள். இலஞ்சம் அனைத்து மட்டங்களிலும் ஒழிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு பெருமைக்குரிய வரலாற்றைப்பெற்றிருக்கின்றது. கடந்த ஆண்டுகளை எண்ணிப் பார்க்கும்பொழுது சுதந்தரப் போராட்டத்தில் தமிழ்நாடு ஆற்றிய மகத்தான தொண்டு என் நினைவுக்கு வருகிறது. மதிப்பிற்குரிய ராஜாஜி, காமராஜ் போன்ற புகழ் வாய்ந்த அரசியல் தலைவர்களும், மற்ற முதலமைச்சர்களும் நிர்வாகத்தில் உயர்ந்த நெறிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த தன்னலமற்ற தொண்டர்கள், காந்தியடிகளின் ஆக்கத் திட்டங்களை நமது நாட்டின் மூலை முடுக்கெங்கும் பரப்பியிருக்கிறார்கள்.



கதர் கிராமத் கைத்தொழில்கள், கிராமப்புற முன்னேற்றம், கூட்டுறவு இயக்கம், அரிசன முன்னேற்றம், மதுவிலக்கு, சமூக சேவை இவை எதுவாயிருந்தாலும் சரி, தமிழ்நாடு, நாட்டின் ஏனைய பகுதிகள் பின்பற்றத்தக்க சிறந்த முன்மாதிரியாக அமைந்திருக்கின்றது. அரசியல் நெறி, நிர்வாகம், கல்வி, விஞ்ஞானம், தொழில் நுட்பம், சட்டம், தொழில் துறை, வேளாண்மை இவைகளில் தமிழ்நாட்டு மக்கள் தங்களுக்கென்று பேரும் புகழும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் விழிப்புற்ற மக்கள், தேச முன்னேற்றத்திற்குரிய ஆக்கப் பணிகள் அனைத்திலும் முன்னணியில் நிற்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாநிலத்தின் தலைமைப் பதவியேற்று தமிழ்நாட்டு மக்களுக்குத் தொண்டு செய்ய என் மீது நம்பிக்கை வைத்து, எனக்கு வாய்ப்பளித்ததற்காக தாற்காலிக குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் பிரதம மந்திரி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நமது தொன்மையான நாகரிகத்திலும், பண்பாட்டிலும் உள்ள சிறந்த அம்சங்கள் இங்கு காணப்படுகின்றன. உங்களுடைய எளிமையையும் அடக்கத்தையும் கண்டு பெருமைப்படுகின்றேன். அதே நேரத்தில் இங்குள்ள மக்கள் முற்போக்குக் கருத்துக் கொண்டவர்களாகவும், சவால்களைச் சந்திப்பதில் கொஞ்சமும் சளைக்காதவர்களாகவும் இருக்கிறார்கள்.

உங்களுக்குத் தொண்டாற்றுவதை நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன். காந்தியடிகளின் போதனைகளுக்கு ஏற்ப, நான் மக்களின் முதல் தொண்டனாகப் பணியாற்றுவேன். என்னுடைய தொண்டு, அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் நீங்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் ஒத்துழைப்புக்கும் உகந்த முறையில் செயல்படுவேன்.

என் மனைவியும், நானும் தமிழ்நாட்டு மக்களுக்கு எங்களுடைய நல்வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாநிலத்தின் எல்லா வகை முன்னேற்றத்திற்கும் நாம் உத்வேகத்துடனும் உற்சாகத்துடனும் ஒன்றுபட்டு உழைப்போம்.

இறைவன் நமது பிரார்த்தனைகளை ஏற்றருள்வானாக!

ஜெய் ஹிந்த்!

வணக்கம்!

**(தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 27-4-'77 அன்று இரவு 9-30 மணிக்கு வானொலி மூலம் தமிழக மக்களுக்கு விடுத்த சிறப்புச் செய்தி.)**

# உணவாய்— மருந்தாய் உதவிடும் பதநீர்!



**வே**ளாண்மைக்குச் சிறிதும் பயன்படாத கழிவு நிலங்களில்—தரிசு நிலங்களில்—யாரும் உழுது பயிரிடாமல்—விதைக்காமல்—வேலி கட்டாமல்—நீர் பாய்ச்சாமல்—காவல் காக்காமல் இயற்கையாகவே முளைத்து ஓங்கி வளர்ந்து பல்வகைப் பயனும் பாங்குறத் தந்து மனித சமுதாயத்திற்கு உதவும் தாவரங்களில் முதன்மையானதும் — முக்கியமானதும் பனைமரமே யாகும்!

''பனை மரமே பனை மரமே ஏன் வளர்ந்தாய் பனை மரமே?'' என்று கேட்டு, பனை தான் தரும் பயன்களை அடுக்கடுக்காகக் கூறும் நாடோடிப் பாடலை நம் நாட்டுச் சிறுவர் சிறுமியர் நன்கறிவர். தன்னிடத்து நின்று கொண்டே தன்னை வெட்டிக் கொத்தித் துன்புறுத்துகின்ற மனிதனையும், அவன் விளைக்கும் கொடுமைகளையும் தாங்கிக்கொண்டு, அவனுக்கு வளமும் வாழ்வும் நல்கிக் காக்கின்ற நிலத்தைப் போலவே, பனை மரமும் தன்னை மிதித்து, வெட்டி, கொத்தி, வினை புரியும் மனிதனுக்குப் பல்வகையான செல்வங்களையும் வழங்கி மகிழ்கிறது—மகிழ்விக்கிறது.

பனை இன மரங்களான பனை, தென்னை, ஈச்சை முதலிய யாவும் வழங்குகின்ற செல்வங்களுள் குறிப்பிடத் தக்கது பதநீர் ; இப்பதநீர் யாவற்றுள்ளும் பிரபலமானதும்—பருவ காலத்தில் மலிந்து கிடைப்பதும் பனை தரும் பதநீரே யாகும்!

பதநீர், பனை மரங்களில் பருவ காலத்தில் தோன்றும் பாளைகளிலிருந்து வடித்தெடுக்கப்படும் இனிய— மிருதுவான — ஊட்டச் சத்துக்கள் மிக்க இயற்கைச் சுவை நீர்! இதனை, தவழ்கின்ற குழந்தை முதல் தடியூன்றி நடமாடும் வயோதிகர் வரை அருந்தி மகிழலாம்! கருவுற்ற மகளிர் பருகலாம்; குழந்தைக்குப் பாலூட்டும் தாய்மார் பருகலாம் ; எல்லோருமே பருகி மகிழத் தக்க எளிய தேசிய பானம் இது.

பாளையிலிருந்து பதநீர் சொட்டும்போது அது இயற்கையான தித்திப்புடன்தான் இருக்கிறது. இது 'கள்' அல்ல; சுரந்து இரண்டு மூன்று மணி நேரம் கழித்த பின்னரே அதில் புளிப்பு ஏற்பட்டுப் போதை தரும் கள்ளாக மாறுகிறது. கலயத்தில் சுண்ணும்பு தடவப்பட்ட பின் அதில் சுரக்கும் பதநீர், 2 அல்லது மூன்று மணி நேரத்திற்குப் பின் சளித்துப் போய்விடும். அது, அருந்தப் பயன்படாது. எனவே, பதநீரும் கள்ளும் ஒன்றெனக் கருதுவது சரியாகாது. பாளையிலிருந்து கலயத்தில் சுரக்கும் பதநீர், கள் (Toddy)ஆக மாறுமல் இனிக்கும் பதநீராக (Sweet Toddy) இருப்பதற்காகவே பதநீர் இறக்கும் கலயத்தில் சுண்ணும்பு தடவப்படுகிறது. கலயத்தில் சுண்ணும்பு தடவா விட்டால், நமக்குப் பதநீர் கிடைக்காது—கள்தான் கிடைக்கும்.

''பதநீரை நாள்தோறும் பருகிவந்தால் எடையும், உயரமும், முகப்பொலிவும் அதிகரிக்கும்; பதநீர் பருகுவோர் களைப்பு நீங்கிப் புத்துணர்வு பெறுவர்; கணைச் சூட்டையும், உடம்பின் வெப்பத்தையும் குறைக்கிறது, பதநீர். தொடர்ந்து பதநீர் பருகினுல் கண்ணேயினின்றும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்; வெப்பத்தால் இதழோரங்களில் புண்கள் ஏற்படாமல் தடுக்கலாம்'' என்பன போன்ற பல்வேறு உண்மைகளைப் பதநீர் ஆராய்ச்சி வல்லுநர்கள் மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர்.

''புத்தம் புதிய பதநீர் போதை தரக் கூடியதன்று; பதநீர் பருகியதால் ஏராளமானவர்கள் மலச்சிக்கல் நோயினின்றும் விடுபட்டிருக்கின்றனர்; நாள்தோறும் காலையில் தேநீர் அருந்துவதற்குப் பதிலாக, ஒரு குவளைப் பதநீர் அருந்தினுல் காலை உணவாக வேறேதும் வேண்டியிருக்காது'' என்ருர் காந்தியடிகள்.

பதநீரில் என்னென்ன சத்துக்கள் உள்ளன? அவற்ருல் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை ஆராய்ந்து டாக்டர் 'ஹில் ஹையா' என்பவர் பின்கண்டவாறு குறிப்பிடுகிருர் :

''1. பதநீரிலுள்ள சீனிச் சத்து உடலுக்கு வெப்பத்தைத் தருகிறது.

''2. மெலிந்து தேய்ந்து வாடிய வடிவுடைய குழந்தைகளின் உடலைப் பதநீரில் உள்ள 'குளுகோஸ்' சீராக்குகிறது.

''3. பதநீர் கணைச் சூட்டை நீக்குகிறது.

''4. கருவுற்ற மகளிரும் மகப்பேறு பெற்ற பெண்களும் பதநீர் பருகி உடல் நலம் பெறலாம்.

''5. பதநீர் இரத்த அழுத்தத்தை (Blood Pressure)த் தடுக்கிறது.

''6. சன்னிவாத சுரம் (Typhoid) நீர்க்கட்டு (Pneumonia) முதலிய நோய்களைத் தடுக்கிறது.

''7. இருதயத்தை வலுவடையச் செய்கிறது; இருதய நோயைக் குணப்படுத்துகிறது.

''8. பதநீரிலுள்ள சுண்ணும்புச் சத்து, பற்களை உறுதிப்படுத்து, ஈறுகளில் இரத்தக் கசிவு ஏற்படாமல் தடுத்துப் பற்களில் படியும் பழுப்பு நிறத்தையும் மாற்றுகிறது.

''9. மெலிந்து, நெஞ்செலும்பு தள்ளிய (Rickets) குழந்தைகளுக்குப் பதநீர் சிறந்த பாதுகாப்பு உணவு.



''10. பதநீரில் உள்ள இரும்புச் சத்து, பித்தத்தை நீக்குகிறது. சொறி, சிரங்கி, தடுமன், காச நோய் முதலியவைகளுக்குப் பதநீர் சிறந்த இயற்கை மருந்து.

''எனவே பதநீர், நோய்களிலிருந்து மனிதனைப் பாதுகாக்கும் சத்துணவாகும். இதனைத் தொடர்ந்து பருகி நலம் பெற மக்கள் முன்வர வேண்டும்.''

அடுத்து, பதநீரில் உள்ள ஊட்டச்சத்துக்கள் எவ்வாறு உடலுக்குப் பயன் தருகின்றன என்பதை மெய்ப்பிக்கப் பள்ளி மாணவர்களுக்குப் பதநீர் கொடுத்துப் பதநீரின் பெருமையை வெளிப்படுத்திய டாக்டர் பான்சே என்ப

## பதநீரில் உள்ள பலவகைச் சத்துகள்

பதநீரில் என்னென்ன சத்துகள் உள்ளன என்பதை டாக்டர் திருமதி கமலா சோஹோனி ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். 225 மில்லி லிட்டர் (8 அவுன்ஸ்) அளவுள்ள ஒரு பாட்டில் பதநீரில் உள்ள சத்துகளைப் பாருங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | அமில—கார நிலை (P.H. Value) | ... 7.2 | |
| 2. | மொத்தச் சர்க்கரை (Total Sugar) | ... 28.8 | கிராம் |
| 3. | சுண்ணும்பு (Calcium) | ... 35.4 | மி. கி |
| 4. | இரும்புச் சத்து (Iron) | ... 5.5 | ,, |
| 5. | பாஸ்பரஸ் (Phosphorus) | .. 32.4 | ,, |
| 6. | தயாமைன் (Thiamine) | ... 82.3 | ,, |
| 7. | ரிப்போபிளேவின் (Riboflavin) | ... 44.4 | ,, |
| 8. | அஸ்கார்பிக் அமிலம் (Ascorbic Acid) | ... 12.2 | ,, |
| 9. | நிக்கோடின் அமிலம் (Nicotinic Acid) | ... 674.1 | ,, |
| 10. | புரதம் (Protein) | ... 49.7 | ,, |
| 11. | கலோரிகள் (Calories) | ...113.8 | ,, |



பதநீர் இறக்கிட பாளை சீவப்படுகிறது.

வருக்கு மகாராஷ்டிரப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்திருக்கிறது.

மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரி கண் வைத்திய நிபுணரும் மதுரை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியருமான டாக்டர் ஜி. வெங்கடசாமி, 'கண் குருடாவதற்குச் சத்தில்லா உணவே முக்கிய காரணம்' என்றும் 'இதனைப் பதநீர் சரிக்கட்டுகிறது' என்றும் ஆராய்ந்து கூறியுள்ளார். அவர் கூறுவதாவது :

''1. நமது உணவில் மாவுச் சத்து, புரதச் சத்து, எண்ணெய் ஆகியவைகள் இருக்கின்றன. இவற்றுடன் இரும்பு போன்ற உலோகப் பொருட்களும் இருக்க வேண்டும். வயிறு நிறைய உணவு உண்டாலும் உணவில் போதிய உயிர்ச் சத்துக்கள் இல்லாவிடில் உடற் கோளாறுகள் உண்டாகும்.

''2. 'ரிப்போஃப்ளோவின்' (பி. வைட்டமின்) என்னும் உயிர்ச் சத்து பால், முட்டை, கீரை, இறைச்சி, பதநீர் முதலிய உணவுகளிலிருந்து கிடைக்கிறது. இச் சத்துக்கள் உணவில் குறைந்தால், வாயின் இரு புறங்களிலும் புண் ஏற்படுகிறது. கண்ணின் ஓரங்களிலும், இமைகளிலும் புண் உண்டாகும். சூரிய ஒளியைப் பார்க்க முடியாது. கண்களில் தண்ணீர் வடியும். பார்வை குறையும். இந்தக் கஷ்டங்களுடன், அடிக்கடி பலர் மருத்துவமனைக்கு வருகிறார்கள். இதன் காரணம், உணவில் உள்ள குறைதான் என்பதை அவர்கள் உணர வேண்டும். கீரை, பதநீர், முட்டை, மாமிசம் இவற்றில் ஒன்றை நாள்தோறும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் இந்த வியாதிகள் ஏற்படுவதில்லை.

''ஒரு பெண்மணி கண்களின் ஓரங்களில் புண் உண்டாகி சமையல் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு மருத்துவமனைக்கு வந்தார். சாதாரண உணவுடன், நாள்தோறும் 8 அவுன்ஸ் பதநீர் கொடுக்கப்பட்டது. 20 நாட்களில் அவர் முழுக் குணம் பெற்றுவிட்டார்.

மிகச் சிக்கனமான, எளிதான முறையில் உடலுக்கு வேண்டிய 'பி' உயிர்ச் சத்துக்கள் பதநீரிலும், பனை வெல்லத்திலும், பனங்கற்கண்டிலும் கிடைக்கின்றன. பதநீர் சிறந்த பானமாவதுடன் நல்ல உணவாகவும் அமைகிறது.''


இப்படி மருந்தாகவும் சத்துணவாகவும் அமைந்துள்ள பதநீர் நம் நாட்டில் நீண்ட நெடுங்காலமாகக் கிராமப் புறங்களிலும், நகரங்களிலும் விற்கப்பட்டு வந்தாலும், இது குறைந்த செலவில் கிடைக்கும் நிறைந்த சத்துடைய இயற்கை பானம் என்பதை நம்மவர்கள் அறிந்திருந்தாலும் நாகரிக மோஸ்தரில் பழகியவர்கள், தெருவிலே— நடைபாதைகளிலே பானைகளில் விற்கப்படும் பதநீரைப் 'பனை ஓலைப்' பட்டைகளிலோ, அலுமினியக் குவளைகளிலோ வாங்கிப் பருகுவதை அசிங்கமாகவும், அநாகரிகமாகவும் கருதினர். மேலும், பதநீர் சரியாக வடிகட்டப்படாததாலும், சரியான அளவில் சுண்ணாம்பு இன்றி மிகுந்தோ, குறைந்தோ காணப்பட்டதாலும் பதநீர் பருகும் விருப்பமிருந்தும் பலர் விலகியே சென்றனர். தமிழகத்தில், இவ்வாறு விலகிச் சென்றவர்களை யெல்லாம் கவர்ந்திழுத்து பதநீர், பருக வைத்த பெருமை, தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நிர்வாகத்தில் இயங்கும் சென்னை மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தைச் சேர்ந்ததே என்பதை யாரும் மறுக்க முடியாது.

மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம், இவ்வாண்டு பதநீர்ப் பருவத்தில் பதநீர் இறக்குவதற்காகச் சென்னையில் 10 ஆயிரம் பனைமரங்களை ரூ. 22 ஆயிரத்திற்குக் குத்தகைக்கு எடுத்திருக்கிறது. பதநீர் இறக்குவதற்கு 140 பனைத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அண்மையில் ஏற்பட்ட புயலால், நெல்லை மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான பனைமரங்கள் சாய்ந்து அழிந்துவிட்டதால், அங்கு வேலை வாய்ப்பிழந்த பனைத் தொழிலாளர்கள் பெரும்பாலோர்க்கு இங்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பதநீர் இறக்கும் தொழிலாளர்கள், 1 லிட்டர் பதநீர் இறக்கிக் கொடுத்தால் 16 பைசா கூலியாகப் பெறுகிறார்கள். ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு 20 முதல் 60 லிட்டர் பதநீர் வரை இறக்கிக் கொடுக்கிறார். சராசரி ஒரு தொழிலாளி நாள் ஒன்றுக்கு 10 ரூபாய் வரை கூலியாகப் பெறுகிறார்.

பனைத் தொழிலாளர்கள் இங்கு வந்து பதநீர்ப் பருவம் முடியும் வரை தங்குவதற்கு மாநில சம்மேளனம் இலவசமாகக் குடியிருப்பு வழங்குகிறது. மற்றும் பதநீர் வரும் வரை (இதற்குச் சுமார் ஒருவாரம் ஆகலாம்) பாளை



சீவுவோருக்கு மாதம் ஒன்றுக்கு 60 ரூபாய்வீதம் உதவித் தொகையும், பதநீர்ப் பருவத்திற்கு அவர்கள் வந்து திரும்பிப் போவதற்கான செலவு தொகையும் மாநில கூட்டுறவு இணையத்தால் கொடுக்கப்படுகிறது.

இத்தொழிலில் இப்போது, புதநீர் சுமக்கும் பெண்கள், குளிர்விக்கும் தொழில் நுணுக்கர்கள், பாட்டில்களைக் கழுவிப் பதநீர் அடைத்து வண்டிகளில் ஏற்றுவோர், விற்பனையாளர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் இப்படியாகச் சுமார் 350 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது சென்னை நகரில் நாள் ஒன்றுக்கு 3,500 லிட்டர் பதநீர் இறக்கப்படுகிறது. எழும்பூரிலும், வண்ணாரப்பேட்டையிலும் உள்ள பதநீர் நிலையங்களில் பதநீர் சுத்தம் செய்யப்பட்டுக் குளிர்விக்கப்பட்டு 1 புட்டியில் 225 மில்லி லிட்டர் வீதம்அடைக்கப்பட்டு, வண்டிகளில் ஏற்றி விற்பனைக்கு அனுப்பப்பெறுகிறது.

சென்னையில் தமிழ்நாடு பால் வள நிறுவனத்தார் நிறுவியுள்ள பால் பங்குகளில் காலை 7 மணிக்குள் பால் விற்பனை முடிந்துவிடுகிறது. எனவே, அந்த பங்குகளில் 50 பங்குகளை வாடகைக்கு எடுத்து, அவற்றில் பதநீர் விற்று வருகின்றனர். இது தவிர, மாநில சம்மேளனம் நிறுவியுள்ள 'கற்பகம்' விற்பனை நிலையங்கள் 10லும், 20 மூன்று சக்கர வண்டிகளிலும் பதநீர் விற்கப்படுகிறது. சென்னை நகரில் ஒரு நாளைக்கு 14,000 பேர் பதநீர் பருகி வருகின்றனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

பால் பங்குகளில் நடைபெறும் பதநீர் விற்பனையில் ஏழைகளும், கணவனை இழந்த மகளிரும், ஆதரவற்றவர்களும், முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டுள்ளனர். படித்து வேலையற்றிருப்பவர்களும், வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். பங்குகளில் இருந்து பதநீர் விற்பவர்க்கு மாதம் ஒன்றுக்கு 90 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. இது தவிர, 150 பாட்டில்களுக்கு மேல் விற்பவர்களுக்கு 1 பாட்டிலுக்கு 1 பைசா வீதம் ஊக்க ஊதியமும் கொடுக்கப்படுகிறது.

மூன்று சக்கர சைக்கில்களில் பதநீர் விற்போர், ஒரு நாளைக்கு 300 முதல் 400 பாட்டில்கள் வரை விற்கின்றனர். இவர்களுக்கு ஒரு பாட்டிலுக்கு 2.5 பைசா வீதம் கொடுக்கப்படுகிறது.


சென்னை நகரில் இப்போது, இந்தக் கோடைப் பருவத்தில் கடற்கரைக்குக் காற்று வாங்கச் செல்வோர், பொதுக் கூட்டங்களுக்குச் செல்வோர், இரயில்களிலும், ஊர்திகளிலும் பயணம் செய்வோர், பொது மக்கள், பள்ளிக் குழந்தைகள், அலுவலகம் செல்வோர், கடின உழைப்பாளர்கள் இப்படிப்பட்ட பலதரப்பினரும் பதநீரை மிகவும் விரும்பி அருந்துகின்றனர்.

களைப்புப் போக்கிப் புத்துணர்ச்சி தருகின்ற—உடம்பின் வெப்பத்தைக் குறைத்து ஊட்டச் சத்தளிக்கின்ற—பானமாக மட்டுமின்றி உணவாகவும் பயன்படுகின்ற— எத்தகைய வேறுபாடும் இன்றி எல்லோருமே விரும்பி அருந்தி மகிழ்கின்ற — குறைந்த விலையில்கிடைக்கின்ற—சாக்கரின் கலப்பில்லாத—ஒரே பானமான பதநீரை இந்நாட்டின் 'தேசிய பானம்' என்று பாராட்டுவது எவ்வகையிலும் மிகையாகாது!

—சாமி பழனியப்பன்.

## பால்வழங்கு பங்குகளில் பதநீரும் கிடைக்கும் !

சென்னை நகர மக்களின் வசதியை முன்னிட்டும், படித்த பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும், 5-3-77 முதல் தமிழ்நாடு பனைவெல்லம் மற்றும் பனைப்பொருள் கூட்டுறவு விற்பனை இணையம் சென்னையில் பால் வள நிறுவனத்தின் 50 பால் வழங்கு 'பங்கு'களில் (டெப்போக்களில்) குளிர் பதநீர் விற்பனைத் திட்டத்தைத் துவக்கியுள்ளது. சுகாதார முறைப்படி சேகரிக்கப்பட்டு, குளிர்வித்து, பாட்டில்களில் அடைத்து வழங்கப்படும் கூட்டுறவு நிறுவனத்தின் பதநீரை நாள் ஒன்றுக்கு 14,000க்கும் மேற்பட்ட மக்கள் விரும்பி வாங்கிப் பருகி வருகிறார்கள். ஒரு பாட்டில் பதநீர் விலை 25 காசு தான் !



# இந்திய இரயில்வேக்களின் வளர்ச்சி


இந்திய இரயில்வேக்கள் இப்போது ஆசியாவிலேயே பெரிய இரயில்வே நிறுவனங்களாகவும், இரஷ்ய இரயில்வேக்களுக்கு அடுத்தபடி ஒரே நிர்வாகத்தில் உள்ள இரயில்வேக்களுள் உலகத்திலேயே இரண்டாவதாகவும் விளங்குகின்றன.


நம் நாட்டிலுள்ள இரயில் பாதைகளின் மொத்த நீளம் 60,231 கி.மீ. ஆகும். இதில் பிராட் கேஜ் பாதை 30,512 கி. மீ. நீளத்துக்கும், மீட்டர் கேஜ் பாதை 25,427 கி.மீ. நீளத்துக்கும், குறுகிய பாதைகள் 4,292 கி.மீ. நீளத்துக்கும் உள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்கள் ஏற்பட்டது முதல், இந்திய இரயில்வேக்கள் சீரான வளர்ச்சியடைந்துள்ளன. முதல் இரண்டு திட்ட காலங்களில், பழைய இயந்திரங்கள், பழுதடைந்து விட்ட இரயில் பெட்டிகள் ஆகியவற்றுக்குப் பதிலாகப் புதியனவற்றை வாங்குவதில்தான் கவனம் செலுத்தப்பட்டது. மூன்றாம் திட்ட காலத்தில், தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப இரயில் போக்குவரத்து வசதிகளும் விரிவாக்கப்பட்டன. அதன் பிறகு, இரயில் பயணிகளுக்கு வசதிகளைக் கூடுதலாகச் செய்து கொடுப்பதிலும் கூடுதலான அளவில் சரக்கு இரயில்கள் விடுவதிலும், இரயில்வே நிர்வாகத்தின் எல்லாத் துறைகளிலும் தன் நிறைவை ஏற்படுத்துவதிலும், இருக்கும் வசதிகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளுவதிலும், இரயில் போக்குவரத்தை நவீனமாக்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இரயில்வேக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள மொத்த மூலதனம் 5,344 கோடி ரூபாயாகும். ஆண்டுதோறும் கிடைக்கும் மொத்த வரவு 1,775 கோடி ரூபாயாகும். எனவே, நாட்டில் உள்ள பொதுத் துறை நிறுவனங்களிலேயே மிகப் பெரியது இரயில்வேயாகும். இவற்றிலிருந்து அரசாங்கத்து ஆண்டு தோறும் 198 கோடி ரூபாய் கிடைக்கிறது. நம் நாட்டில் கூடுதலான பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் நிறுவனமும் இந்திய இரயில்வேக்களேயாகும். இரயில்வே தொழிலாளர் எண்ணிக்கை 17 இலட்சம் ஆகும். இதில் 2.5 இலட்சம் பேர் மாதச் சம்பளம் பெறாமல், வார அல்லது நாட் கூலிக்கு வேலை செய்து வருகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் 11 ஆயிரம் இரயில்கள் ஓட்டப்படுகின்றன. இவற்றில் சுமார் 80 இலட்சம் பேர் பிரயாணம் செய்கின்றனர். இவை 6 இலட்சத்து 10 ஆயிரம் டன் சரக்குகளை ஏற்றிச் செல்லுகின்றன. நம் நாட்டில மொத்தம்






7,056 இரயில் நிலையங்கள் உள்ளன.

அதிகமான போக்குவரத்தைச் சமாளிக்க, 8,469 நீராவி எஞ்ஜின்களையும், 1,803 டீசல் எஞ்ஜின்களையும், 796 மின்சார எஞ்ஜின்களையும், 3,95,200 சரக்கு வாகன்களையும், 26,226 பிரயாணிகள் இரயில் பெட்டிகளையும், 2,214 மின்சார இரயில் பெட்டிகளையும் இந்திய இரயில்வேக்கள் பராமரித்து வருகின்றன. இரயில்வே சாதனங்கள் 1950ல் இருந்ததை விடத் தற்போது மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்துள்ளன. 1976-77ல் மொத்தம் 23 கோடி டன் சரக்குகள் ஏற்றிச்செல்லப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


கடந்த பத்து ஆண்டுகளில் இரயில்வேக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மிகவும் பெரிது. 2,296 கி.மீ. தூரத்துக்குப் புதிய பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. 758 கி.மீ. நீளமுள்ள மீட்டர் கேஜ் பாதைகள் அகலப் பாதைகளாக மாற்றப்பட்டுள்ளன. 3,013 கி.மீ. தொலைவுக்கு இருவழிப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 1957 கி.மீ. தூரத்துக்குப் புதிதாக மின்சார இரயில் பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. 12,245 கி.மீ. தூரத்துக்குப் புதிதாகத் தண்டவாளங்கள் போடப்பட்டுள்ளன. அவற்றின் கீழ் உள்ள மரப் பலகைகளும் மாற்றப்பட்டிருக்கின்றன. 1,811 எஞ்ஜின்கள், 9,394 பயணிகள் இரயில் பெட்டிகள், 486 மின்சார இரயில் பெட்டிகள் முதலியனவும் 1,12,925 சரக்கு இரயில் பெட்டிகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டு உள்ளன.

இரயில்வேக்களுக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் உள்ளன. உத்தரப் பிரதேசத்தில் உள்ள வாரணாசியில் டீசல் எஞ்ஜின் தொழிற்சாலையிலும் மேற்கு வங்காளத்தில் சித்தரஞ்சனிலுள்ள மின்சார எஞ்ஜின் தொழிற்சாலையிலும் உபயோகப்படுத்தப்படும் பொருட்களில் 88 சதவிகிதம் இந்தியாவில் செய்யப்பட்டவையாகும்.

சென்னை பெரம்பூரில் உள்ள இணைப்புப் பெட்டித் தொழிற்சாலையில் இரயில் பெட்டிகள் செய்யப்படுகின்றன. இவ்வாறு ரயில்வேக்களுக்குத் தேவையான அனேகமாக எல்லாமே நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இரயில்வேக்கள் ஆண்டுதோறும் 770 கோடி ரூபாய் மதிப்புள்ள சாதனங்களை மட்டுமே வாங்குகின்றன.

தொழில்நுட்ப ஆராய்ச்சி, வடிவமைப்பு ஆகிய பணிகளுக்காக இரயில்வேயில் தனி நிறுவனம் இருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் லக்னோவில் உள்ள இந்த நிறுவனம் வெளிநாடுகள் சிலவற்றிற்கு ஏற்றுமதியாகும் கருவிகளை வடிவமைப்புடன் அவை ஏற்றுமதியாகும்போது அவற்றின் தரத்தையும் பரிசீலிக்கிறது. இந்திய இரயில்வே சாதனங்கள் பின் கண்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன :

ஹங்கேரி
போலந்து
நியூஜிலாந்து
ஈரான்
துருக்கி
பர்மா
சிலோன்
தாய்லாந்து
கொரியா
மலேசியா
சூடான்



நைஜீரியா
கிழக்கு ஆப்பிரிக்கா

இரயில்வேக்கள் தங்களுடைய ஊழியர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் வீட்டு வசதியும், மருத்துவ வசதியும், குழந்தைகள் படிப்பதற்கு வசதியும் செய்து கொடுக்கின்றன. இது வரை பல தரப்பட்ட ஊழியர்களுக்கு 5,39,641 இருப்பிட வசதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 10,519 படுக்கைகளைக் கொண்ட 665 மருத்துவ மனைகளும், சுகாதார நிலையங்களும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

தொழிலாளர்களின் குறைகளுக்குப் பேச்சு வார்த்தை மூலம் பரிகாரம் காண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மிக உயர் மட்டத்தில் அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சம்மேளனமும், மண்டல, வட்டார, தொழிற்கூட மட்டங்களில் சம்மேளத்திற்கு உட்பட்ட சங்கங்களும் உள்ளன.

ஓராண்டுக்கு 225 கோடி ரூபாய் வரை செலவு செய்து, பெரு நகரப் பகுதிகளில் பயணம் செய்பவர்களுக்குக் குறைந்த இரயில் கட்டணம் ஏற்படுத்தியும் உணவு, நிலக்கரி, மாட்டுத் தீவனம் முதலியவற்றை மிகவும் மலிவான கட்டணத்தில் ஏற்றிச் சென்றும், இலாபமில்லாத பாதைகளில் கூட இரயில்களை ஓட்டியும், ஏற்றுமதிப் பொருட்களைச் சலுகைக் கட்டணத்தில் ஏற்றிச் சென்றும் இந்திய இரயில்வேக்கள் சமூகப்பணி செய்து வருகின்றன.

கல்கத்தா, பம்பாய், சென்னை, தில்லி போன்ற பெரு நகர்ப் பகுதிகளில் இரயில் போக்குவரத்தை முற்றிலும் மாற்றியமைக்கவும், புதிய பாதைகள் போடவும் இரயில்வேக்கள் விரிவாகத் திட்டமிட்டுள்ளன. 1973 மே-ஜூனில் கல்கத்தா டம்டம்—டாலிகஞ்சு பகுதியில் சுரங்க இரயில் பாதை போடும் வேலை ஆரம்பமாயிற்று.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வேக்களுக்கு 1,400 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஐந்தாவது திட்டத்தில் இது வரையில் 2,152 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இரயில்வேயில் சரக்குப் போக்குவரத்து மட்டும் 25 அல்லது 26 கோடி டன்னாக இருக்கும். பயணிகள் போக்குவரத்தும், அவர்கள் பயணம் செய்யும் தூரமும் 17 முதல் 25 சதவிகிதம் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாக 880 எஞ்ஜின்களையும், 54 ஆயிரம் சரக்கு இரயில் பெட்டிகளையும், 4,541 பிரயாணி பெட்டிகளையும், 680 மின்சார இரயில் பெட்டிகளையும் வாங்குவதற்கு இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

# கூட்டுறவில் மின் விசைச்செக்குத் தொழில்

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த வடலூரில் மின் விசைச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுக் குடிசைத்தொழில் சங்கம் துவக்கப்பட்டுள்ளது. செக்கு எண்ணெய் உற்பத்தித் தொழில் நம் நாட்டிற்கு முக்கியமானதும், பழமையானதுமான குடிசைக் கைத்தொழிலாக இருந்து வருகிறது. தொழில் வளர்ச்சியின் காரணமாக மாடுகளின் துணையுடன் இயங்கி வந்த இத்தொழில் மின் விசையின் மூலம் நவீன முறையில் இயங்கத் துவங்கியுள்ளது. வடலூர் மின் விசைச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் துணை கொண்டு இயங்கி வருகிறது. இச்சங்கத்தின் மூலம் 21 பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 10 மின் விசைச் செக்குகள் சங்கத்தில் நிறுவப்பட்டுள்ளன. சங்கத்துக்கு பங்குத் தொகைக் கடனாக ரூ. 10,000மும், மின் விசைச் செக்கு வாங்கக் கடனாக ரூ. 55,000மும், கொட்டகை கட்டக் கடனும் மானியமும் ரூ. 10,000-மும் தமிழக அரசு அனுமதித்துள்ளது. சங்க அங்கத்தினர்களில் படித்த இளைஞர்கள் 10 பேர்கள் உள்ளனர். நாட்டுச் செக்கை விட விசைச் செக்கின் மூலம் இரண்டு மடங்கு வரை எண்ணெய் பிழியும் திறன் உள்ளதால் இது மிக்க இலாபகரமானது. தவிர இதனை இயக்குவதும் எளிது—நாட்டுச் செக்கைப் போன்ற எண்ணெய் ஆட்ட மாடுகள் தேவையில்லை, இரண்டு நபர்களும் அவசியமில்லை—ஒருவரே இயக்கலாம்.

சங்கத்துக்கு வேண்டிய எண்ணெய் வித்துக்கள் விருத்தாசலம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலம் நல்ல தரமான சரக்காகப் பெறப்படுகின்றன. ஒரு மூட்டை எள்ளை எண்ணெய் பிழிய சுமார் 6 மணி நேரம் ஆகிறது. இதற்கு, இயக்குபவர் ரூ. 12 வீதம் கூலி பெறுகிறார். மாதம் ஒன்றுக்கு ஒரு நபர் ரூ. 300-க்குக் குறையாமல் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கூலி பெற்றுப் பயன் பெறுகிறார்.


காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன டிசைன்கள்—யமுனா, அஜந்தா, சாமுண்டி-உள்ளங்கவர் வகைகள்—பரவசமூட்டும் வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ் அச்சிட்ட சேலைகள் இன்றைய நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி

# சுற்றுலாக் கொள்கையின் புதிய கண்ணோட்டம்



நம்முடைய சமூகத்தில் உள்ள செல்வம் குறைந்த பிரிவினரின் தேவைகளைப் பொறுத்த மட்டில், குறிப்பாக தன்னுடைய சுற்றுலாக் கொள்கையில் இந்திய அரசாங்கம் ஒரு புதிய கண்ணோட்டம் கொண்டுள்ளது. சர்வ தேச மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாவை முன்னேறச் செய்யும் வகையில் சிறப்பாக உள் நாட்டுச் சுற்றுலா வளர்ச்சியில் சாமான்ய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வழி வகைகளை மேற்கொள்ளுவது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஆலோசனை அளிக்கும் விதத்தில் கூடிய விரைவில் நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உலகச் சுற்றுலாக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட 'சுற்றுலாப் பொருட்கள் மேம்பாடு' என்ற தலைப்பிலான பிராந்தியக் கருத்தரங்கு ஒன்றை புது டில்லியில் ஏப்ரல் 19ஆம் தேதி துவக்கி வைத்துப் பேசுகையில் மத்திய சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் செயலாளர் திரு ஆர். பி. நாயக் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

செல்வச் செழிப்பு மிக்க நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் உயர்ந்த, தரமான சுற்றுலா வசதிகள், செல்வச் செழிப்பு அவ்வளவாக இல்லாத —நாடுகளிலிருந்து வரும் உள் நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் தேவைகள் ஆகியவற்றில் சீரான இணைப்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை திரு. நாயக் வலியுறுத்தினர். செல்வச் செழிப்பு மிக்க நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சொகுசு, ஆடம்பர ஹோட்டல்களை நாம் ஒரு புறம் அமைத்திருக்கிறோம் என்றாலும், மறுபுறம் செல்வச் செழிப்பு அவ்வளவாக இல்லாத நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆகியவர்களின் தேவைகளில் போதுமான கவனம் செலுத்த முடியவில்லை என்றும் திரு நாயக் குறிப்பிட்டார். சுற்றுலாப் பயணிகளின் இப்படிப்பட்ட இரு வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தனித் தனியாக வசதிகள் அமைப்பு உருவாக்கப்பட வேண்டியுள்ளது என்றும் இந்தப் பிரச்சினைக்கு காணப்படும் பதில் இந்தியாவுக்கு மட்டும் அல்ல இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றிருக்கும் பல்வேறு நாடுகளுக்கும் பொருந்தும் வகையில் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றுலா என்பது தேசிய வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார நடவடிக்கை மட்டுமல்ல; உலகின் பல்வேறு நாடுகளுக்குமிடையில் கலாச்சாரப் பரிவர்த்தனைக்கான முக்கியதொரு சாதனமாகும். சுற்றுலாவின் பொருளாதாரப் பங்கு, நாட்டின் வெளிச் செலாவணி வருமானத்தின் கீழ் அதனுடைய பங்கு, கூடுதல் வேலை வாய்ப்புக்கு அதனுடைய ஆற்றல், திறன் ஆகிய விஷயங்களில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளுக்கிடையில் சிறந்த நல்லுணர்வுகளை வலுப்படுத்துவதற்கும், உலக சமாதானத்தில், நெருங்கிய கலாச்சார வளர்ச்சிக்கும், வர்த்தக உறவுகள், அபிவிருத்திக்கும் சுற்றுலா முக்கியமானதோர் காரணியாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் சுற்றுலாவின் முன்னேற்றம் குறித்து பரிசீலித்த திரு நாயக், 1976ல் இந்த நாட்டில் 5 இலட்சத்து 33 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்; 1975ஆம் ஆண்டோடு இதை ஒப்பிடுகையில் 15 சதவிகிதம் கூடுதலாகும் என்றும் குறிப்பிட்டார். 1976ல் 3 சதவிகிதம் உயர்வு என்று மதிப்பிடப்பட்டுள்ள உலகச் சுற்றுலாப் பயணிகள் உயர்வோடு ஒப்பிடுகையில் மேற்படி உயர்வு குறிப்பிடத்தக்கதாகும். 1976ல் 25 கோடி டாலர்களைச் சுற்றுலாப் பயணிகள் செலவு செய்துள்ளனர். இதன் மூலம் இந்தியாவின் ஏற்றுமதிப் பட்டியலில் சுற்றுலா 6வது இடத்தை வகிக்கிறது.

வருங்கால அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி திரு நாயக் குறிப்பிடுகையில், ஈரானிலிருந்து இந்தியாவுக்கு சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில் டெக்ரானில் முன்னொரு சுற்றுலா அலுவலகம் திறக்கப்பட்டிருப்பதாகவும், டோக்கியோ, சிட்னி ஆகிய இடங்களில் தற்போது செயல்பட்டு வரும் அலுவலகங்கள் தவிர ஒசாகா, மெர்ல்பொர்ன் ஆகிய இடங்களிலும் தனி நபர் நிர்வகிக்கும் அலுவலகங்கள் ஆஸ்திரேலியா மற்றும் கிழக்கு ஆசியாவில் அமைக்கப்பட விருப்பதாகவும் தெரிவித்தார். தாய்லாந்து, மலேசியா ஆகிய இடங்களிலும் இதே மாதிரி அலுவலகங்களைத் திறக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தென் ஆசியா, கிழக்கு ஆசியா, பசிபிக் ஆகிய 12 நாடுகளைச் சேர்ந்த சுமார் 30க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றுள்ளனர்.



# சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்!

சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நகரின் குடி நீர் வழங்கு வசதித் திட்டங்களைப் பெருக்கவும், வடிகால் வசதித் திட்டங்களை மேம்பாடு செய்யவும் ஓர் உயர் மட்ட ஆணைக்குழு அமைக்க வேண்டும் என்று சர்வ தேச வளர்ச்சி மேம்பாட்டுக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

சென்னைப் பெரு நகர வளர்ச்சிக்காக—நிரந்தரப் பலன் தரும் ஆக்கப் பணிகளுக்காக—சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விடக் கூடுதலாகச் செலவிடப்பட்டுள்ளது. ரூ. 7 கோடி ஒதுக்கீட்டிற்கு எதிராக ஏழே கால் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் மன நிறைவு அளிப்பதாக உள்ளன.

நடப்பு நிதி ஆண்டைப் பொறுத்த வரையில், அதாவது 1977-78ல் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களுடன் கூடப் புதிய திட்டங்களுக்காக ரூ. 25 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை கடந்த ஆண்டு செலவு செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விட ரூ. 6 கோடி அதிகமாகும். ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன் இந்த ஆண்டு நிறைவேற்றப்பட விருக்கும் திட்டங்களுக்கான செலவையும் சேர்த்தால் மொத்தம் ரூ. 45 கோடி, நடப்பு நிதி ஆண்டில் செலவிடப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், குடி நீர் வசதியைப் பெருக்குவது, நீர் ஆதாரங்களைப் பெருக்குவது, வடிகால் வசதிகளை மேம்பாடு அடையச் செய்வது ஆகியவற்றுக்காக தனி உயர்மட்ட அமைப்பு ஒன்று நிறுவ வேண்டும். குடி நீர் வழங்கு திட்டத்தைச் செம்மையாகச் சீரமைத்து நீர் வழங்குவதை முறைப்படுத்த வேண்டும் என்று சர்வ தேசக் குழு கருத்துத் தெரிவித்துள்ளது. இது கருத்தில் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

குடிசைப் பகுதிகளை மேம்படுத்தி, அடிப்படைச் சுகாதார வசதிகளைச் செய்துதருவது, தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்குதல், ஓய்வு நேரத்தில் சம்பாதிப்பதற்கான தொழில் திட்டங்கள் போன்றவைகளை உலக வங்கியின் உதவி பெற்று நிறைவேற்றவும் கருதப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் சென்னை மாநகரில் பெருகி வரும் போக்குவரத்து வசதித் தேவைகளைச் செய்து கொடுப்பதற்காக விரைவுப் போக்குவரத்துத் திட்டங்களைப் பல கட்டங்களில் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக திருவல்லிக்கேணி பாரதி சாலையிலிருந்து (பைக்கிராஃப்ட்ஸ் சாலை) கடற்கரை மின்சார இரயில் நிலையம் வரையில் இரயில் விடப்படும். இதற்கு ரூ. 24 கோடி செலவிடப்படும். பெரும்பாலும், இது, தரைமட்டத்தில் ஓடும் இரயிலாகத்தான் இருக்கும்.


இரண்டாவது கட்டமாக பாரதி சாலையிலிருந்து மயிலாப்பூர் லஸ் முனைக்கும்,

மூன்ருவது கட்டமாக லஸ் முனையிலிருந்து அடையாறு கஸ்தூரி பாய் நகருக்கும், நான்காவது கட்டமாக கடற்கரை (பீச்) மின் இரயில் நிலையத்திலிருந்து மணலிக்கும் போக்குவரத்து மேம்பாட்டு வசதித் திட்டத்தின் கீழ் இரயில்கள் விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, புறநகர்ப் பகுதிகளிலிருந்து சென்னைக்கு வருவோர் வசதிக்காகக் கூடுதல் மின்சார இரயில்கள் அதிகம் விடுவதற்கு வசதியாக இரயில் பாதைகள் அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. சென்னை-திருவள்ளூர், சென்னை-கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களுக்கிடையே மின்சார இரயில் விடவும், இவற்றைத் தாம்பரம்-கடற்கரை (பீச்) மின்சார இரயில் நிலையங்களுடன் இணைக்கவும், சென்னையைச் சுற்றி வட்ட இரயில் பாதை அமைக்கவும் திட்டமிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நிதி வசதியைப் பொறுத்து இத்திட்டங்கள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும். மணலி—மறைமலை நகர் ஆகிய புறநகர்த் திட்ட வேலைகள் துரிதமாக முன்னேறி வருகின்றன.

**(மத்திய அரசு வீட்டு வசதித் துறைச் செயலாளர் திரு என். ஜே. காமத் அவர்கள் தலைமைச் செயலகத்தில் பத்திரிகையாளர் கூட்டத்தில் அறிவித்த செய்திகளிலிருந்து தொகுக்கப்பட்டது).**




# வீட்டுக்கொரு இயங்கு எரிவாயு சாதனம் அவசியம்

இந்தியா தன்னுடைய தேவைகளில் ''தன்னிறைவைப்'' பெற வேண்டும் என்ற நமது அறைகூவலின் விளைவு, உணவு உற்பத்தியில் தன்னிறைவும், உடைகளின் தேவைகளிலே தன்னிறைவும் ஏற்பட்டுள்ளது. ஆயினும் சக்தி தேவைகளில் (Energy requirements) நாம் இன்னும் தன்னிறைவு பெற்ருேம் அல்லோம். சக்தித் தேவை ஒரு பரந்த கடலாகக் காட்சி அளிக்கிறது. இந்தத் தேவையில் நாம் அன்ருடம் பயன்படுத்தும் எரிபொருள் ஒரு பெரும் பங்கு வகிக்கிறது. எரி பொருளாகப் பயன்படுத்த, குறைந்த செலவில் கிடைக்கக் கூடிய வழிமுறைகளைப் பற்றிய ஆராய்ச்சி பெரிதளவில் நடைபெறுகிறது. மேற்சொல்லப்பட்ட ஆராய்ச்சிகளில் ஒன்ருக கிராமப் புறங்களில் திரண்டு கிடக்கும் ஆய் பொருள்களாலும், இயற்கை அளித்துள்ள உன்னதமான படைப்புகளைக் கொண்டும் உழவர் பெருமக்களுக்குப் பயனளிக்கக் கூடிய வகையில் சக்தியினை அளித்திட முடியுமா என்பதனைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பண்ணை இயந்திரத் துறையினரால் (Department of Farm machinery) நடத்தப் பெற்றது. அதன் பயனக எழுச்சியுற்றதுதான் ''இயற்கை எரி பொருள் சாதனம்''.

### இயற்கை எரிவாயு—ஒரு விளக்கம்

காற்றில்லா வெற்றிடத்தில் வாழும் உயிர்ப் பொருட்கள் குறைப்பு முறையினுல் அங்ககப் பொருட்களில் வேதியியல் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அங்ககப் பொருள்கள் பிளக்கப் பட்டு 'குளுகோஸ்' மூலக் கூறுகளில் மாறுதல் உண்டாகும்போது கார்களின் சக்தி மீத்தேனக வெளியேறுகிறது. இவ்வாறு அங்ககப் பொருள்களாகிய பண்ணை உரம், வைக்கோல் மற்றும்

கழிவுப் பொருள்கள் மாற்றங்கள் அடைவதால் கிடைக்கும் 'மீத்தேன்' எரிபொருளாக விளங்குவதால் தற்போதைய எரிபொருட் பற்றுக் குறை நிலையில் மிகவும் முன்னேற்றமாக கருதப்படுகிறது. புதிய உரத்தில் 'செல்லுலோஸ்' மற்றும் 'ஹெமி செல்லுலோஸ்' *18* சதவிகிதம் முதல் *29* சத விகிதம் வரை உள்ளது. மேற்படி வேதியியல் மாற்றங்களினுல் 'நைட்ரஜன்' நீரில் முன்னிலையில் சேகரிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் 'நைட்ரஜன்' நிலை நாட்டுதல் எதிர்பார்க்கப்படுவதில்லை. மாட்டுச் சாணத்தில் தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து (N. P. K.) பின்வருமாறு :

$N_2$—*1.4* சதம் முதல் *1.8* சதம் வரை.

$P_2O_5$—*1.1* சதம் முதல் *2.0* சதம் வரை.

$K_2O$—*0.0* சதம் முதல் *1.2* சதம் வரை

மாட்டுச் சாணத்திலிருந்து கிடைக்கும் வாயுக்களின் பருமன் அளவு சராசரியாகப் பின்வருமாறு உள்ளது :

மீத்தேன் —*50* முதல் *60* சதம்

கரியமிலவாயு—*30* முதல் *40* சதம்

ஹைடிரஜன் — *5* முதல் *10* சதம்

நீராவி மற்றும் 'ஹைடிரஜன் சல்பைடு' சிறிதளவு. ஒரு நாளைக்கு ஒரு மாட்டின் சராசரி சாணத்தினளவு *10* கிலோ. அதிலிருந்து *13* முதல் *33* கன அடி வாயுவை ஒரு நாளில் உற்பத்தி செய்ய இயலும். ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்குத் தேவையான எரிவாயு சுமார் *12* முதல் *15* கன அடி. அதாவது *0.16* கிலோ வாட் சக்தி கொடுக்கவல்லது எனத் தெரிய வருகிறது. இவ்வாறு உண்டாக்கப்பட்ட வாயு ஒரு கன மீட்டருக்கு *4,500* முதல் *6,000* கலோரிகள் சக்தி கொண்டுள்ளது. *6,000* கலோரிகளின் மதிப்பு கீழ்க்கண்டவைகளுக்குச் சமமாக்கப்படலாம் :

*1.10* லிட்டர் சாராயம்.

*0.8* லிட்டர் பெட்ரோல்

*0.6* லிட்டர் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்

*1.5* கன அடி வீட்டு எரிவாயு

*1.4* கிலோ விறகு கரி.

*2.2* கிலோ வாட் மணி மின்சார சக்தி.

இயற்கை எரிவாயு இயந்திரத்தின் மூலம் *730* கிலோ உரமானது ஒரு டன் (*1,000* கிலோ) சாணத்திலிருந்து கிடைக்கிறது. ஆனுல் பழைய முறைப்படி *500* கிலோதான் கிடைக்கும்; அதாவது சாணத்தை நேராக எரு ஆக்கும் முறையில் கால்நடைகளின் சாணம் முக்கியமாகப் பசு, எருது இவைகளின் சாணம் எரிபொருளாகவும், உரமாகவும் பயன்படுத்தப் படுகின்றது. சாணம் எரி பொருளாகப் பயன்படுத்தப்படும்போது உரமாகப் பயனுவதில்லை. உரமாகப் பயன்படுத்தும் பொழுது எரிபொருளாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை இழந்து விடுகிறோம். ஆனுல் சாண எரிவாயுச் சாதனத்தைப் பயன்படுத்தினுல் **'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்'** என்பது போல, சாணத்தினை எரிபொருளாகவும், அதே சமயம் உரமாகவும் பயன்படுத்திக் கொள்கின்றோம்.

கால்நடை எண்ணிக்கை அதிகமாக உள்ளதாலும், வீட்டு எரிபொருள் சரியாகக் கிடைக்காததாலும் காதி கிராம தொழில் வாரியம் போன்றவற்றின் மூலமாக இயற்கை வாயு இயந்திரங்கள் நல்ல செல்வாக்கை அடைந்து வருகின்றன. ஆகவே இந்த இயற்கை வாயு இயந்திரத்தைச் செல்வாக்கடையச் செய்யும் பொருட்டு, அதனுடைய அமைப்பில் ஏற்படும் சில குறைபாடுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

## எரிவாயு சாதனத்தின் அடைப்படை அமைப்பு


இயற்கை உரங்களிலிருந்து மீத்தேன் வாயு உற்பத்தி செய்யும் சாதனம் இந்தியாவில் *1900*-ஆம் ஆண்டில் முதல் முறையாக உருவாக்கப்பட்டது. நகராட்சிகள், நகரங்களிலிருந்து வரும் சாக்கடைக் கழிவு நீரை மேற்கூறிய 'மீத்தேன்' என்னும் எரி வாயுவை உற்பத்தி செய்யப்பயன்படுத்தின. இத்தகைய சாதனங்களின் அமைப்பானது சிறு செரிப்பான்களையும் (digesters), வாயுக் கொள் கலங்களையும் (Gas holders) தனித்தனியே கொண்டிருந்தன. 'மீத்தேன்' எரிவாயு வாயுக் கொள்கலன்களில் சேமிக்கப்பட்டு சமையலுக்கும், விளக்கு எரித்தலுக்கும் பயன்படுத்தப் படுகிறது.

ஒரே சீரான வாயு உற்பத்தி கிடைக்கப் பெறுதலுக்கு இரண்டு அல்லது மூன்று செரிப்பான்கள் தேவைப்படுகின்றன. 2 மீட்டர் × 2 மீ × 2 மீ, அளவுள்ள செரிப்பான்கள் உகந்ததென ஆராய்ச்சிகளினுல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச்செரிப்பான்கள் சதுர வடிவிலோ அல்லது செவ்வக வடிவிலோ அல்லது வட்ட வடிவிலோ அமைக்கப்படுகின்றன. செவ்வக வடிவத் தொட்டிகளை வட்ட வடிவத் தொட்டிகளைவிட எளிதில் அமைத்து விடலாம். ஆனுல் வட்ட வடிவ கட்டமைப்புகள் நீர் அழுத்தத்தையும், வெளி மண் அழுத்தத்தையும் எளிதில் எதிர் கொள்கின்றன. இதனுல் இவைகளின் நீடிப்புக் காலம் (Life Period ) அதிகரிக்கப்படுகிறது. மேலும் வட்ட வடிவ அமைப்புகள் மெல்லிய சுவர் கொண்டதாக விளங்குகின்றன.

எரி வாயுவின் அளவிற்குத் தக்கபடி நீரினூடே மேலும் கீழும் செல்லும் வாயு கொள் கலன்கள் பொதுவாக வட்ட வடிவிலேயே அமைக்கப்படுகின்றன. கொள்கலன்களின் சுவருக்கும், செரிப்பான் தொட்டிகளின் சுவருக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள கழிவு நீரானது உற்பத்தி செய்யப்பட்ட வாயு கொள்கலனிலிருந்து வெளிவருதலைத் தடுக்க ஏதுவாக ஒரு மூடியாக விளங்குகிறது. கழிவு நீரில் மிதக்கும் இக்கொள்கலன்கள் மேலும் கீழும் செல்லும்பொழுது அதன் அசைவமைப்புக்கள் சரி நேராக்கப்படுதல் வேண்டும்.

லக்னோவிலுள்ள திட்ட ஆராய்ச்சிச் செயல் முறைக் கழகம் (Planning research and action

Institute) காதி கிராமத் தொழில் குழு அமைத்த எரிவாயு சாதனத்தில் சில மாற்றங்களைச் செய்தது. கரைசலைக் கலக்க கலக்கிகளும், வெப்பப் படுத்தும் அமைப்புகளும், வெப்பப் பரவுதல் அமைப்புகளும் புதிதாக அமைக்கப்பட்டன. ராமகிருஷ்ண மிஷன் ஆசிரமத்தின் எரிவாயு சாதன அமைப்பு ஒரு செரிப்பானையும், இரண்டு வாயுக் கொள்கலன்களையும் கொண்டுள்ளது. இக்கொள்கலன்கள் ஒன்றின் மீது ஒன்ருக கவிழ்த்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு நாளில் 100 கன அடி எரி வாயுவை உற்பத்தி செய்யும் சாதனம் சுமார் ரூபாய் 1,600—2,300 விலை என 1970—71ஆம் ஆண்டில் குறிக்கப்பட்டது. தற்சமயம் இதே அளவு சாதனம் சுமார் ரூ. 3,000—4,000 வரை விலை குறிக்கப்படுகின்றது.



இயற்கை எரிவாயுச் சாதனங்களை அமைப்பதிலும், பயன்படுத்துவதிலும் கீழே குறிப்பட்டுள்ள பிரச்சினைகள் ஏற்படுகின்றன :

(அ) வாயுக் கொள்கலன் துருப்பிடித்தல்.

(ஆ) செரிப்பான்களில் ஏற்படும் அடைப்பும், உலர்ந்து விடுதலும்.

(இ) குளிர்காலங்களில் வாயு உற்பத்தி கணிசமாகக் குறைதல்.

(ஈ) செரிப்பான்கள், அமைக்கப்படுதலில் உள்ள கட்டமைப்புகள் 'வேலைகள்' மண் தோண்டுதல், செங்கல், சிமெண்ட் கொண்டு அமைக்கப்படும் வேலைகள் அதிக ஆட்களையும், அதிகப் பணத் தொகையினையும் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டியதாயுள்ளது.

(உ) சாதனம் தரை மட்டத்திற்குக் கிழே அமைக்கப்பட்டுள்ளதால் செரிக்கப்பட்ட கரைசல் வெளியேற்றப்படுதல் கடினமாக உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் முயற்சிகள் :—

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பண்ணைப் பொறியியல் துறை இயற்கை எரிவாயுச் சாதனத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பலனுக மேலே குறிக்கப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டு புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அனுகூலங்கள் இவ்வமைப்பின் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

(அ) எரி வாயுக் கொள்கலன் நீரோடும், காற்ருேடும் தொடர்பு கொள்ளும் பொழுது 'ஃபெரிக் ஆக்ஸைட்' சாதனத்தை அரிக்கும் திறனைப் பெற்றுள்ளது. செரிப்பானையும் கொள்கலனையும் ஒன்ருக இணைத்தல் மூலம் இதனை நீக்கலாம். தவிரவும் சாதனத்தினுள் மேலும் கீழும் அசைவை உடைய அமைப்பும் நீக்கப்படுகின்றது.

(ஆ) பழைய முறைப்படி அமைக்கப்பட்டு உள்ள எரிவாயுச் சாதனங்களில் வாயுவின் அழுத்தம் வெளிச்செல்லும் குழாய், உள் குழாய் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்க முடிவதில்லை. ஆனல் புதிய அமைப்பில் அமைக்கப்பட்டுள்ள நிலையான கொள்ளளவும், நிலையில்லா அழுத்தம் கொண்ட எரிவாயு கொள்கலன் மேற்சொன்ன குறையினை நீக்குகின்றது.


(இ) கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை எரிவாயு உற்பத்தியின் அளவினை வெவ்வேறு வெப்ப நிலைகளிலும், செரிப்புக் காலங்களிலும் கிடைக்கப் பெறுதல் குறிக்கின்றது.

| வெப்பநிலை (டிகிரி செண்டிகிரேடு) | ஒரு நாளைய வாயு உற்பத்தி (கன மீட்டர்) | செரிப்புக் காலம் (மாதங்களில்) |
|---|---|---|
| 15 | 0.150 | 12 |
| 20 | 0.30 | 6 |
| 25 | 0.60 | 3 |
| 30 | 1.00 | 2 |
| 35 | 2.00 | 1 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் குளிர் காலங்களில் வாயு உற்பத்தி குறைகின்றது என்பதைத் தெளிவாகக் குறிக்கின்றன. இதனை நீக்கத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைத்துள்ள எரிவாயுச் சாதனத்தில் இரண்டு கலக்கிகள் பொருத்தப் பட்டுள்ளன. இவை வாயு உற்பத்தியினை அதிகரிக்கின்றன. ஆனல் தென்னிந்தியா வெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளதால் இத் தகைய பிரச்சினை எழுவதில்லை.

(ஈ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கண்டுபிடித்துள்ள எரி வாயுச் சாதனம் ஓர் இயங்கும் எரிபொருள் சாதனம் ஆகும். அதாவது இச்சாதனத்தைப் பயன் படுத்துவோர் விருப்பப்படி எவ்விடத்தில் வேண்டுமானலும் மாற்றிக் கொள்ளலாம். சுருக்கமாகக் கூறின் இச்சாதனம் ஒரு ''நடமாடும் சாதனம்'' ஆகும்.

(27-ஆம் பக்கம் பார்க்கவும்)




பரத நாட்டியத்தின் சிறப்பைப் பாரெங்கும் விளக்கிடும் வகையில் தமிழ்நாடு அரசும், தேசிய கலாகேந்திரமும் (National Institute of Performing Arts) இணைந்து 'பாலா' என்ற திரைப்படத்தை உருவாக்கியுள்ளன. பரத நாட்டியத்திற்கே தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டுள்ள—'பரத நாட்டியப் பேரரசி' என்று பெயர் பெற்றுள்ள—திருமதி பாலசரஸ்வதி அவர்கள் நடித்து, புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் திரு. சத்யஜித் ரே அவர்களால் இயக்கப் பெற்றுள்ள 'பாலா' திரைப்படம் 19—4—77 அன்று சென்னை பிலிம் சேம்பர் அரங்கில் முதன்முதலாகத் திரையிடப் பெற்றது. இத்திரைப்பட வெளியீட்டு விழாவில் தமிழ்நாடு தற்காலிக ஆளுநர் திரு. பி. கோவிந்தன் நாயர் அவர்கள், பரத நாட்டியத்திற்குத் திருமதி பாலசரஸ்வதி அவர்கள் செய்துள்ள சேவையைக் குறிப்பிட்டுப் பாராட்டியதுடன், அவருக்குப் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தார்.

# படமும் செய்தியும்




சென்னைக்கு 22—4—1977 அன்று வருகை தந்த ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசின் வெளியுறவு அமைச்சர் திரு. ஹான்ஸ் டயட்ரிச் ஜென்ஸ்செர் அவர்களைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. வி. ஆர். பணிக்கர் அவர்கள் வரவேற்றார்.





கிராமப்புற மக்களின் உணவு மற்றும் ஊட்டச் சத்துத் தேவையை ஈடுசெய்வதற்கான யுக்திகள், இவ்வகையில் உணவு அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் ஆற்ற வேண்டிய பணி ஆகியவை பற்றிய கருத்தரங்கை 23—4—1977 அன்று தமிழ்நாடு தற்காலிக ஆளுநர் திரு. பி. கோவிந்தன் நாயர் அவர்கள் துவக்கி வைத்ததுடன், சிறப்பு மலரை வெளியிட்டு, அதன் முதல் பிரதியை மைசூர், மத்திய உணவுத் தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் பி. வி. அம்லா அவர்களிடம் கொடுத்தார்.




மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சர் திரு. ரவீந்திர வர்மா அவர்கள் 23—4—1977 அன்று மாநில விருந்தினர் மாளிகையில் பத்திரிகைச் செய்தியாளர் களிடையே உரையாற்றினர்.





தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டு, சென்னைக்கு வருகைதந்த திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களை 27—4—1977 அன்று சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செல்வி ரத்தினம் என்ற அரிசன வகுப்பைச் சார்ந்த சிறுமி மலர் மாலை அணிவித்து குங்குமம் இட்டு வரவேற்றார்.

இந்தியாவின் தற்காலிகக் குடியரசுத் தலைவர் அவர்களால் தமிழ்நாடு ஆளுநராக நியமிக்கப்பட்டு, 27—4—1977 அன்று சென்னைக்கு வந்த திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களை ஆளுநர் ஆலோசகர்கள் திரு. ஆர். வி. சுப்பிரமணியன், திரு. வி. கார்த்திகேயன் ஆகியோரும், தலைமைச் செயலாளர் திரு. சி. வி. ஆர். பணிக்கர் அவர்களும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்றனர்.








தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 28—4—77 அன்று காந்தி மண்டபம் சென்று காந்தி அடிகள் திருஉருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து வணங்கினார்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 28—4—1977 அன்று இராஜாஜி நினைவகத்திற்குச் சென்று மலர் வளையம் வைத்து வணங்கினார்.




தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் 28—4—77 அன்று காமராஜர் நினைவகத்திற்குச் சென்று மலர் வளையம் வைத்து வணங்கினார்.



தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 28—4—1977 அன்று பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.


ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் இராணிப்பேட்டையில் 28—4—1977 அன்று ‘ஆசிய கார்பன் லிமிடெட்’ நிறுவனத்திற்குக் கடைக்கால் நாட்டுவித்தார்.



(21-ஆம் பக்கத் தொடர்ச்சி)

# இயற்கை எரிவாயுச் சாதனம்

(மாதிரி வரைபடம்)




விளக்கம் :

① தாங்கி. ② கலக்கி. ③ சாணக் கரைசல் உள்செல்லும் குழாய். ④ அடைப்பான். ⑤ கன சதுர கொள்கலன். ⑥ வாயு வெளியேற்றுக் குழாய். ⑦ அடைப்பான். ⑧ காம்பு. ⑨ செரித்த கரைசல் வெளியேற்றுக் குழாய் அடைப்பான். ⑩ செரித்த கரைசல் வெளியேற்றுக் குழாய். ⑪ அடைப்பான். ⑫ கலக்கிகளின் தகடு. ⑬ தடுப்புச் சுவர் (துளை கொண்டது).

## புதிய அமைப்பு

படத்தில் காட்டப்பட்டுள்ள இயற்கை எரிவாயுச் சாதனம் 4 கால்கள் கொண்ட இரும்புத் தாங்கிகளின் மேல் அமைக்கப்பட்டு உள்ளது. இச்சாதனத்தின் முக்கிய பாகங்கள்:

1. இரும்புத் தாங்கிகள்.

2. இரண்டு அறைகள் கொண்ட கன சதுர அமைப்பு (10 காஜ் உருக்குத் தகட்டால் செய்யப்பட்டது).

3. பாதி உயர, துளைகள் இடப்பட்ட தடுப்புச் சுவர்.

4. அடைப்பான்கள்.

இப்பாகங்களின் அளவுகள் :—

அடிப்பாக அளவு : 1.28 மீ. ; 1.28 மீ.; 0.635 மீ.

கொள்கலன் : 1.28 மீ. ; 1.28 மீ ; (1.09 : :0.19 : :0.18 மீ.)

கலக்கிகள் : 2.5 செ.மீ. விட்டம் கொண்ட இரும்புக் கழிகள் 'ட' வடிவ 1.2 செ.மீ. விட்டமுள்ள சதுரங்கள். 4 செ.மீ. அகலமும் 20.3 செ.மீ. நீளமுமுள்ள தகடுகள்.

வெளியேற்றக் குழாய் : 1.875 செ.மீ. துருப்பிடிக்காக் குழாய்.

வெளியேற்றக் குழாய் அடைப்பான் : 1.875 செ.மீ. விட்டம்.

கொள் கலனின் கொள்ளளவு : 1.8 கன மீட்டர்.

தடுப்புச் சுவருக்கு மேலுள்ள இடத்தின் கொள்ளளவு : 1.35 கன மீட்டர்.

இக்கன சதுர சாதனம் 10 'காஜ்' உருக்குத் தகட்டால் செய்யப்பட்டது. (பாகம் 5). நடுவில் பாதி உயரத்திற்குத் துளைகள் இடப்பட்ட ஒரு தகட்டால் (பாகம் 13) இரண்டு அறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு அறையில் புது சாணக் கரைசல் உள்ளே செல்லும் குழாய் (பாகம் 3) ஒரு மூடியுடன் (பாகம் 4) பொருத்தப்பட்டுள்ளது. அதன் எதிர்ப் புறத்திலுள்ள அறையில் இக்குழாய்க்கு 15 செ.மீ. தாழ்வாக மற்றொரு குழாய் (பாகம் 10) ஒரு மூடியுடன் (பாகம் 9) செரிக்கப்பட்ட கரைசலை நிரப்பும்பொழுது மேற்சொன்ன இரண்டு குழாய்களும் திறக்கப் பட்டிருத்தல் வேண்டும். இதனால் செரிக்கப் பட்ட கரைசல் எளிதில் வெளியேறுகிறது. மேற்புறத்தில் வாயு வெளியேறும் குழாய் (பாகம் 6), ஒரு அடைப்பானுடனும் (பாகம் 7), ஒரு காம்பு போன்ற அமைப்புக் கொண்டும் (பாகம் 8) பொருத்தப்பட்டுள்ளது. அடிப் புறத்தில் தொட்டியைச் சுத்தம் செய்ய வசதி யாக அடைப்பான்கள் (பாகம் 11) இரண்டு பொருத்தப்பட்டுள்ளன. குளிர் காலங்களில் வாயு உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு இரண்டு கலக்கிகள் (பாகம் 2) பொருத்தப்பட் டுள்ளன.

கொள்கலனில் கரைசலை நிரப்பியவுடன் அடைப்பான்களை (பாகம் 9, பாகம் 4) மூடி விட வேண்டும். அப்பொழுதுதான் வாயு உற்பத்தியும், வாயு சேகரிப்பும் எளிதில் நடைபெறும்.

## இயங்கும் விதம்

சாணமும், தண்ணீரும் 1: 1 என்ற விகி தத்தில் கலந்த கரைசலை ஒரு புனல் மூலம் புது சாணக் கரைசல் உள்ளே செல்லும் குழா யில் ஊற்ற வேண்டும். இச்சமயத்தில் வெளிக் குழாய் (பாகம் 10) திறந்திருத்தல் வேண்டும். இதனால் உள்ளே செல்லும் குழாயில் புதிதாக ஊற்றப்படும் சாணக் கரைசலின் அளவிற்கு செரிக்கப்பட்ட சாணக் கரைசல் வெளியேற்றும் குழாயின் வழியே வெளியேறும். கரைசலை ஊற்றி முடிந்தவுடன் அடைப்பான்களை மூடி விடல் வேண்டும். 23 நாட்களுக்குப் பிறகு வாயு வெளியேற்றும் குழாயின் அடைப்பானைத் திறத்தல் வேண்டும். முதலில் 'ஸ்' என்ற ஒலியுடன் வரும் வாயு சிறிதளவு கரியமில வாயுவையும் கொண்டிருக்கும். மூன்று நாட் கள் கழித்து மீத்தேன் வாயு உற்பத்தி துவங்கும். புதிய சாணக் கரைசல் நாள்தோறும் வாயு முழுதும் உபயோகித்தபின் ஊற்றப்படல் வேண்டும். நம்முடைய அன்றாடத் தேவைக்கு ஏற்பச் சாணக் கரைசலை ஊற்றிக் கொள்ள லாம்.


வெவ்வேறு உபயோகங்களுக்கான எரி வாயுவின் அளவுகள் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன :

(அ) சமையலுக்கு —2 கன மீட்டர்/ நாள்/5 பேருக்கு (5 பேருக்கு ஒரு நாளையின் தேவை).

(ஆ) தண்ணீரை வெப்பப்படுத்த 3 கன மீட்டர் / நாள் / 100 லிட்டர் (100 லிட்டர் தண்ணீர் ஒரு நாளில்).

(இ) விளக்கு எரிக்க : 0.10—0.15 கன மீட்டர் (1 மணி நேரம் ஒரு விளக்கு எரிய).

இச்சாதனத்தின் மூலம் கிடைக்கப்பெறும் எரி வாயுவை டீசல் இயந்திரத்தை இயக்குவ தற்கும் பயன்படுத்தலாம். இரண்டு குதிரைத் திறனுள்ள டீசல் இயந்திரம் இயங்க 0.5 கன மீட்டர் வாயு ஒரு மணி நேரத்தில் தேவைப்படும். வாயு நிலையாகத் தொடர்ந்து கிடைப்பதற்கு ஏதுவாக கொள்கலனை ஒவ் வொரு நாளின் இறுதியில் நிரப்புதல் வேண் டும். மேலும் இவ்வாயுவினை டீசல் இயந்திரத் தில் எரி பொருளாகப் பயன்படுத்தும் பொழுது இயந்திரத்தின் எரிபொருள் நுழைவுக் குழா யில் காற்று வடிப்பானுக்குக் கீழே ஒரு காம்பு அமைப்பினைப் (Nipple) பொருத்தல் வேண் டும். காற்றும், மீத்தேன் வாயும் உள்ளே செல் வதற்கு இஃது உதவி புரிகின்றது. எரிவாயுச் சாதனத்தின் வாயு வெளிச் செல்லும் குழா யில் பொருத்தப்பட்டுள்ள அடைப்பானை மூடி யிருக்கும் பொழுது காற்று மட்டும் இயந்திரத் தினுள் செல்லும். மீத்தேன் வாயுவை இயந்தி ரத்தினுள் மெதுவாகச் செலுத்தும்பொழுது துவக்கத்திற்கு டீசல் எரிபொருள் இயந் திரத்தை இயக்குதலில் உதவி புரிகின்றது. 'மீத்தேன்' வாயுவின் அளவிற்குத் தக்கபடி டீசலின் அளவும் கட்டுப்படுத்தப்படுகிறது. மீத்தேன் வாயுவை இயந்திரத்தின் எரி பொரு ளாக பயன்படுத்துவதின் மூலம் காற்றில் ஏற்படும் அசுத்தக் கலப்பு தடுக்கப்படுகின் றது. சாதனத்திலிருந்து கிடைக்கப் பெறும் வாயுவை நிலையான கொள்கலன்களில் 8 கிலோ ச.செ.மீ. அழுத்தத்தில் சேமித்து வைத்துக் கொள்ளலாம்.



சாண எரிவாயு அடுப்பு.

## புதிய அமைப்பும்—பழைய அமைப்பும்—ஓர் ஒப்புமை

| எண் | விவரங்கள் | பழைய அமைப்பு | புதிய அமைப்பு |
|---|---|---|---|
| 1. | கொள்ளளவு | 100 கன அடி | 70 கன அடி |
| 2. | கொல்லர் வேலை | தேவை | தேவையில்லை |
| 3. | சிமெண்ட்/செங்கல் | தேவை | தேவையில்லை |
| 4. | இடம்விட்டு இடம் அசையும் அமைப்புகள் | உண்டு | இல்லை |
| 5. | பாகங்களில் ஏற்படும் அரிப்பு | அதிகம் | குறைவு |
| 6. | இட அமைவு | தரை மட்டத்திற்குக் கீழ் | தரை மட்டத்திற்கு மேல் |
| 7. | சாதனத்தின் இடமாற்றம் | இல்லை | உண்டு |
| 8. | வாயு சேகரிப்பு | நிலையான அழுத்தம், நிலையில்லாக் கொள் அளவு | நிலையான கொள் அளவு, நிலையில்லா அழுத்தம் |
| 9. | விலை (1976) | ரூ. 5,000. | ரூ. 2,000. |
| 10. | தண்ணீர் அடைப்பு | உண்டு | இல்லை |
| 11. | குழாய்களில் ஏற்படும் அமைப்பு | அதிகம் | குறைவு |
| 12. | செரிக்கப்பட்ட கரைசல் வெளியேற்றம். | கடினம் | எளிது |

மேலே கொடுக்கப்பட்ட அட்டவணை பழைய அமைப்புச் சாதனத்திற்கும் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கண்டு பிடித்துள்ள புதிய அமைப்பிற்கும் உள்ள வேற்றுமைகளைத் தெளிவுற எடுத்துரைக்கிறது.

### உற்பத்திச் செலவுகளின் விவரம்

சமையலுக்கு இண்டென் (INDANE) வாயுவைப் பயன்படுத்துவதினால் ஏற்படும் செலவும் சாண எரிவாயுவைப் (இயற்கை எரி வாயு) பயன்படுத்துவதினால் ஏற்படும் செலவையும் கீழே கணக்கிடப்பட்டுள்ளது.

ஒரு இண்டேன் வாயு சிலிண்டர் வேலை செய்யும் நேரம்—60 மணி.

விலை—ரூ. 30.

∴ ஒரு மணி நேர வாயுவின் விலை—0.50

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய இயற்கை எரிவாயுச் சாதனத்தின் விலை—ரூ. 2,000(C)

அன்றாட வாயு உற்பத்தி—13—33 கன அடி/மாடு.

5 நபர் கொண்ட ஒரு குடும்பத்தின் தேவை—45 கன அடி.

சாதனத்தின் ஆயுட்காலம் (L)—
10 ஆண்டுகள்.

சராசரி வேலை செய்யும் நேரம் (H)—
1,000 மணி/ஆண்டு.

$$\text{தேய்மானம்/மணி} = \frac{C-S}{L \times H} \qquad \frac{2{,}000-2{,}000}{10} \over 10 \times 100$$

S என்பது இயந்திரத்தின் கழிவு விலை (10 சதம்) : ரூ. 0.18/மணி

வட்டி/மணி (15 சதவீதம்)

$$\frac{C+S}{2} \times \frac{i}{H}$$

i என்பது வட்டி வீதம்

$$(2,000 \times \frac{2,000}{10} \times \frac{1}{2} \times \frac{15}{1000} \times \frac{1}{1000}$$

—ரூ. 0.17/மணி

| | |
|---|---|
| தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இயற்கை எரிவாயு சாதனத்தைப் பயன்படுத்துவதினுல் ஆகும் செலவு | ரூ.0.18 + 0.17 = ரூ. 0.35 |

(சாணமும், ஆட்களின் செலவும் இல்லையெனக் கொள்க)

எனவே ரூ. 0.15/மணி இப்புதிய சாதனத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மீதப் படுத்தப்படுகிறது.

டீசல் இயந்திரத்தை டீசல் மட்டும் பயன்படுத்தி உபயோகப்படுத்துவதினுல் ஆகும் செலவு, இயற்கை எரி வாயு டீசல் இரண்டும் சேர்ந்து பயன்படுத்தி உபயோகப் படுத்துவதினுல் ஆகும் செலவும் கீழே கணக் கிடப்பட்டுள்ளன.

**டீசல் மட்டும் :**

டீசல் தேவை—1.5 லிட்டர்/மணி

1.5 லிட்டர் விலை—1.5 1.40

1 லிட்டர் விலை ரூ. 14.0 : ரூ. 2.10

**டீசல் இயற்கை எரிவாயு கலந்து பயன்படுத்துவதனுல் :**

டீசல் தேவை—1 லிட்டர்/மணி

விலை—ரூ. 1.40

எரி வாயு தேவை—2.25 கன மீ/மணி

0.47 க.மீ. இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்ய ரூ. 0.35 தேவை.

∴2.25 க.மீ. எரிவாயு விலை—ரூ. 1.68

∴டீசல் எரிவாயு செலவு—
ரூ.1.40+ரூ.1.68=3.08

இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்துவதினுல் ஆகும் செலவு அதிகமாக உள்ளது எனினும், கால்நடைகளின் கழிவுப் பொருட்களின் எரிபொருள் தன்மையைக் கொண்டு கணக்கிடும்பொழுது கீழ்க்கண்ட முடிவிற்கு வரலாம்.

டீசல் எரிவாயு —ரூ. 1.40
(எரிவாயு செலவு இல்லையெனக் கொள்க)

டீசல்—ரூ. 2.10

∴சேமிப்பு—ரூ. 0.70

இந்த சேமிப்பு அளவு அதிக மாறுதல்களுக்குட்பட்டது. இம்மாறுதல்கள் இயந்திரங்கள் வேலை செய்யும் நிலத்தின் அமைப்பு, இயந்திரத்தின் திறன் ஆகியவைகளைப் பொறுத்து மாறும். பண்ணைப் பொறியியல் துறையினர் நடத்திய சோதனையின்படி 19 முதல் 38 சதவீத எரிபொருள் சேமிப்பு கிடைக்கப் பெற்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை இம்மாறுதல்களைக் காட்டுகின்றன :

| எண் | குதிரைத் திறன் (செயல்முறை) | எரிபொருள் செலவு (கிலோ மணியில்) | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|
| | | டீசல் மட்டும் | டீசல்மீதேன் | கொள்ளளவு (ஒரு மணியில்) | சதவீதம் (%) |
| 1 | 1 | 0.61 | 0.38 | 277 க.செ.மீ. | 37.7 |
| 2 | 2 | 0.64 | 0.41 | 277 ,, | 36.0 |
| 3 | 3 | 0.74 | 0.48 | 306 ,, | 35.1 |
| 4 | 4 | 0.89 | 0.64 | 294 ,, | 28.1 |
| 5 | 5 | 1.25 | 1.00 | 282 ,, | 19.2 |

சக்தித் தட்டுப்பாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவும், பெட்ரோலிய எரி பொருட்களின் செலவினைக் குறைக்கவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய ''இயங்கு இயற்கை எரிவாயு சாதனத்தினை'' கிராமங்களில் அமைத்தல் வேண்டும். கடலெனக் காட்சியளிக்கும் நம் நாட்டின் சக்தித் தேவைகளை நிறைவேற்ற இச்சாதனம் பெரிதளவில் உதவும்.

**முடிவுரை**

எரிவாயு ஆராய்ச்சியில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒரு மலர்ச்சி எழுச்சி யுற்றது! ஒரு ''நடமாடும்'' எரிவாயுச்சாதனம் உருவாகியது! மகிழ்ச்சியுடனே மக்கள் பயன்படுத்திட 'ஒரு கல்லில் இரண்டு மாங்கனியென' கால்நடைகள் அளித்திடும் கழிவு, பயிர் செழிக்க நல்லுரமும் நா சுவைக்கசமையலுக்கு எரிபொருளும் கிடைக்கிறது. மேலும் கழனிகளுக்கு வளம் கூட்டும் டீசல் இயந்திரத்தின் எரிபொருளுக்கு ஒரு கூட்டு கிடைக்கிறது. எனவே நாட்டின் இன்றைய நடப்பிற்குத் தேவை வீட்டுக்கொரு 'இயங்கு எரிவாயுச் சாதனம்''.

# இந்தியக்கைத்தறிப் பொருள்கள்

கைத்தறி நெசவுத் தொழில் நம் நாட்டின் பெரிய குடிசைத் தொழிலாகும். விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் துறை மட்டுமே பெரும்பாலான மக்களுக்கு வாழ்க்கை வழியாக உள்ளது. இத்தொழிலில் சுமார் ஒரு கோடி மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

நம் நாட்டின் பருத்தித் துணி வகைகளின் உற்பத்தியில் கைத்தறித் துணிகளின் உற்பத்தி கணிசமான பங்கு வகிக்கிறது. நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பருத்தித் துணிகளின் மொத்த அளவில் மூன்றில் ஒரு பங்கைக் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்றனர். 1976ஆம் ஆண்டில் 233 கோடி மீட்டர் நீளமுள்ள கைத்தறிப் பருத்தித் துணி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்டக் காலத்தின் இறுதிக்குள்ளாக, 3,000 கோடி மீட்டர் கைத்தறிப் பருத்தித் துணியை உற்பத்தி செய்யக் குறியளவு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

நம் நாட்டின் துணி வகைகளின் மொத்த ஏற்றுமதியில் கைத்தறித் துணிகளின் பங்கு சுமார் 60 சதவீதமாகும். 1976-77-ல் 2,150 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணி வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

புதிய கைத்தறி அபிவிருத்தித் திட்டம், கிராம அபிவிருத்தி, கைத்தறி நெசவாளர்களின் பொருளாதாரச் சீரமைப்பு இவற்றுக்கான புதிய வழிகளைத் திறந்துள்ளது. கைத்தறித் தொழிலுக்கென ஒரு மத்திய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி ஐந்தாவது திட்டக் காலத்தின் இறுதிக்குள்ளாக கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்கென 50 கோடி ரூபாய் செலவிடப்படும்.

கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரங்களில் குறுகிய காலத்திற்குள் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கென 20 தீவிர கைத்தறி அபிவிருத்தித்திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென மத்திய அரசு மாநில அரசுகளுக்கு கணிசமான நிதியுதவி அளித்துள்ளது. இதே போல கைத்தறித் துணி வகைகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை அபிவிருத்தி செய்வதற்கென ஏற்றுமதி அபிவிருத்தி முனைப்புக் கொண்ட 21 திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்தல், கிராமப் புற வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் இவற்றில் தனக்குள்ள ஈடுபாடுகளை அரசாங்கம் ஏற்கெனவே வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய கிராமப் புறச் சீரமைப்புப் பணிகளைச் செயல்படுத்துவது, விரைவுபடுத்துதல் ஆகியவற்றில் கைத்தறி நெசவுக்குக் கணிசமான பங்கு உண்டு. தற்போது புது தில்லியில் நடைபெற்று வரும் முதலாவது தேசிய கைத்தறிக் கண்காட்சி, கைத்தறித் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு வகை செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# மஞ்சளோ மஞ்சள்!

**1. மஞ்சள் இரகங்களும் நடவு முறையும்.**


தமிழகத்தில் சாகுபடியிலிருப்பது 'மதராஸ் மஞ்சள்' என்னும் உள்ளூர் இரகமாகும். இது நாட்டு மஞ்சள் இரகத்தைச் சேர்ந்தது. கஸ்தூரி மஞ்சள் இரகமும் பயிரிடப்படுகின்றது. தற்போது 'துகிராலா' என்னும் குண்டூர் மஞ்சள் ஈரோடு பகுதிகளில் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தவிர 'தெக்கூர் பேட்டா', 'கஸ்தூரி பசுப்பு', 'சாய பசுப்பு' போன்ற இரகங்கள் இந்தியாவின் பல பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நம் மாநிலத்திற்கேற்ற இரகங்களைத் தேர்ந்தெடுக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மஞ்சள், இரு வகையான கிழங்குகள் மூலம் பயிரிடப்படுகின்றது. (1) உருண்டை அல்லது முட்டை வடிவாக அமைந்த தாய் மஞ்சள், (2) நீண்ட குறுகிய விரல் மஞ்சள். இவை இரண்டில் தாய் மஞ்சள் நல்ல விளைச்சலைக் கொடுக்கும். தாய் மஞ்சள் அதிகமில்லாதபோது, 'விரல் மஞ்சளைப் பயன்படுத்தலாம். இதிலும் மூன்று முளைக் கணுகள் உள்ள மஞ்சள் துண்டுகளை நட்டால் போதுமானது. இதனால் விளைச்சல் குறைவதில்லை.

பண்படுத்தி, பார் அமைத்த நிலத்தில் தேர்ந்தெடுத்த விதைக் கிழங்குகளை 0.1 சதக் கரையும் செரசான் கலந்த நீரில் நனைத்து பாரின் ஒரு பகுதியில் 10 அங்குல இடைவெளிக்கு ஒன்றாக நட வேண்டும். ஏக்கருக்கு தாய் மஞ்சளானால் 700—800 கிலோவும், விரல் மஞ்சளானால் 500—600 கிலோவும் தேவைப்படும்.

**2. மஞ்சளுக்கு உரமிட்டு மகசூலை உயர்த்துவோம்.**

மஞ்சள் பயிருக்கு ஏக்கருக்கு 48 கிலோ தழைச் சத்து, 24 கிலோ மணிச் சத்து, 24 கிலோ சாம்பல் சத்து உரம் போதுமானது. மணிச் சத்து, சாம்பல் சத்து உரங்களை, நடும்போது அடியுரமாக இட வேண்டும். தழைச் சத்து உரத்தை, நடவு செய்யும் போது, 30-வது நாள், 60-வது நாள், 90-வது நாள், 120-வது நாள் ஆகிய காலங்களில் ஐந்து சமப் பிரிவுகளாகப் பிரித்து மஞ்சளுக்கும் சிறிது கீழே இடவேண்டும்.



தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உழவியல் துறையில் நடத்திய ஆய்வில் மேற்கண்டவாறு தழைச் சத்தை ஐந்து சம பாகமாக 10 கிலோ வீதம் இட்டதில்தான் அதிக மகசூலாக ஏக்கருக்கு 10,680 கிலோ கிடைத்துள்ளது.

**3. மஞ்சளில் செதில் பூச்சித் தடுப்பு முறை.**

கோவை, திருச்சி மாவட்டங்களில் மஞ்சள் அதிகமாகச் சாகுபடியாகிறது. இப்பயிரை இலைப் பேன், செதில் பூச்சி, கண்ணாடி இறக்கைப் பூச்சி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளும், தண்டு துளைக்கும் ஆமணக்குக் காய்ப் புழுவும், இலைப் புழுக்களும் தாக்கிச் சேதப்படுத்துகின்றன. இவற்றில் செதில் பூச்சி நடவுக்கு சேமித்து வைக்கப்பட்டிருக்கும் விதைக் கிழங்குகளையும், நட்ட பின் வளரும் கிழங்குகளையும் தாக்கி, சாற்றை உறிஞ்சிச் சேதம் விளைவிக்கிறது. இவை மிகச் சிறியனவாகவும், செதில் போலச் சற்றுப் பருமனாகவும், பழுப்பு நிறத்துடனும், கிழங்கின் மேல் அடை அடையாக ஒட்டிக் கொண்டுமிருக்கும். விதைக் கிழங்குகள் தாக்கப்படுவதால் முளைப்பு பாதிக்கப்பட்டு, முளையும் காய்ந்து விடும். வளர்ந்த செடிகளில் கிழங்கு தாக்கப்பட்டால், செடியின் வளர்ச்சி குன்றியும், கிழங்கு சிறுத்தும் மகசூல் குறைந்தும் போகும்.

செதில் பூச்சி தாக்காத கிழங்குகளை நடுவது மிகவும் நல்லது. மாறாக தாக்கப்பட்ட கிழங்குகளை பூச்சி கொல்லி மருந்து கொண்டு கட்டுப்படுத்திய பின் நடுவது அவசியம். இதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், பூச்சியியல் துறை ஓர் ஆய்வு செய்தது. அதன்படி செதில் பூச்சியைக் கட்டுப்படுத்த 0.05 சதம் 'ஜோலோன்' 35 இ.சி. (1.5 மி.லி./லி), 'நுவான் 100 இ.சி.' (0.5 மி.லி./லி), 'நுவாக்ரான் 40 இ.சி.' (1.25 மி.லி./லி) 'ஃபாஸ்வெல் 34 இ.சி.' (1.5 மி.லி./லி.) போன்ற ஏதாவது ஒரு மருந்துக் கலவையைத் தயார் செய்து, செதில் பூச்சி தாக்கிய மஞ்சள் கிழங்குகளை 15 நிமிடம் அதில் மூழ்கவைத்து, பின் எடுத்து, உலர்த்தி, ஒரு வாரம் கழித்து நடவு செய்யலாம். இதனால் கிழங்கின் முளைப்புத் திறனும் பாதிக்கப்படுவதில்லை.

**தகவல்:**

**தகவல் தொடர்பு நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மைப்**
**பல்கலைக் கழகம், கோவை-3.**

# தமிழ்நாடு சமூக நலக் குழுவின் சீரிய பணிகள்



—சாரதா பரமேஸ்வரன்

“பெண்கள் இந்த நாட்டின் கண்கள்!” என்ருல் மிகையாகாது. இந்த நாட்டின் வாழ்வும் வளர்ச்சியும், ஒளிமயமான எதிர்காலமும் பெண்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. ஆகவே, சமூக நலம் செழிக்க பெண்கள் முன்னேற்றம் இன்றியமையாததாகும்.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்நாட்டு மக்களின் வறுமையை ஒழிக்க வேண்டுமென்பதுதான் நம் நேருஜி அவர்கள் வகுத்த ஐந்தாண்டுத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இக்குறிக்கோளை அடைய நாம் முக்கியமாக மேற்கொள்ள வேண்டியவைகளாவன:

1. வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது.

2. பின்தங்கிய வகுப்பினருக்கும், மிகவும் பிற்போக்கான நிலையிலிருக்கும் மக்களுக்கும் நல்வாழ்வு நல்கிட மூலைமுடுக்குகளிலுள்ள கிராமங்கள் முன்னேற்றமடைய வழிவகுப்பது.

3. விதவைகள், ஊனமுற்ருேர் முதலியவர்கள் வாழ்க்கையில் ஒரு அளவுக்கு மறுமலர்ச்சி அடையச் செய்வது.

4. முதியோர்களுக்குக் கல்வி கற்பிப்பதுடன் நாட்டில் உள்ள எல்லா மக்களும் கல்வி அறிவு பெற்றவராக இருக்கச் செய்தல்.

மேற்கண்ட இம்முன்னேற்றங்களையெல்லாம், செயல்படச் செய்யும் பொறுப்பேற்றிருப்பதுதான் ‘‘மத்திய சமூக நலக் குழுவாகும்’’

**தோற்றம்,**

முதன்முதலாக 1944-ஆம் ஆண்டு பெண்கள் சமூகநலப் பிரிவு ஒன்று திருமதி. பாரிஜாதம் நாயுடு அவர்களின் தளரா முயற்சியாலும், கடுமையான உழைப்பினுலும் அமைக்கப்பட்டது. இப்பிரிவிலிருந்து பயிற்சி பெற்ற ஊழியர்களின் மூலமாக மற்ற கிராமங்களிலெல்லாம் கிளைச் சங்கங்கள் உண்டாயின. குழந்தைகளின் பராமரிப்பு இல்லங்கள் ஏற்பட, இக்கிளைச் சங்கங்கள்தான் முன்ேனுடிகளாய் இருந்தன,

மத்திய சமூக நலக்குழு 1953-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அமைக்கப்பட்டது. அதை அடுத்து அதன் ஒரு அங்கமாக சென்னையில் ஒரு சமூகநலக்குழு 1954-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சமூகநலக் குழுவின் முக்கிய கொள்கைகளாவன:

**முக்கிய கொள்கைகள்**

1. சமூகநல நிறுவனங்கள் முன்னேற ஊக்கமளிப்பது.

2. சமூகநல முன்னேற்றத்திற்கு உதவும் தனியார் நிறுவனங்களுக்கு வேண்டிய பண வசதியும், உபகரண வசதிகளும் செய்வது.

3. அரசினர் உதவி பெற்று நடத்தும் சமூகநல நிறுவனங்களின் எல்லாத் திட்டங்களையும் மதிப்பிட்டு உதவுவது.

4. மத்தியக் குழுவுக்கும், மற்றுமுள்ள நிறுவனங்களுக்குமிடையே ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உதவுவது.

5. உதவி மானியத் தொகை கோரி வரும் தனியார் நிறுவனங்களின் மனுக்களைப் பரிசீலித்தல்.

6. அரசினர் உதவியுடன் நடந்து வரும் நிறுவனங்களை அடிக்கடி கண்காணித்து மத்தியக் குழுவிற்கு அறிவிப்பது.

7. தமிழ்நாட்டின் எந்தெந்தப் பகுதிகளில் சமூகநல முன்னேற்றத்திற்கு என்னென்ன தேவைப்படுகின்றன என்றறிந்து, அதற்கான புதுப்புது திட்டங்களை வகுத்து அவை நடப்பதற்கேற்ற வழிகளை மத்திய சமூகநலக் குழுவிற்கு எடுத்துரைத்தல்.

தமிழ்நாடு அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினுடைய 1961-ஆம் ஆண்டின் அரசு ஆணை எண். 1433-ன்படி பெண்கள், குழந்தைகள் நலனையொட்டிய எல்லாப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டிய பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை கூடி எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் பரிசிலித்து ஒரு முடிவெடுத்து, அதை மத்திய சமூக நலக்குழுவிற்கு அறிவிக்க வேண்டும். குழுவினர் அனைவரும் தங்கள் எல்லைக்குட்பட்ட இடங்களிலுள்ள எல்லா நிறுவனங்களையும் அவ்வப்போது சென்று பார்வையிட்டாக வேண்டும்.

மத்திய சமூகநலக்குழுவின் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பொறுப்பேற்று நடத்துவது மாநிலக் குழுவின் வேலையாகும். இதன் அனைத்து ஊழியர்களும் சமூக நலத்துறை இயக்குநரின் தலைமையில் பணியாற்றுவார்கள். மேற்பார்வையாளர் முதல், கடைநிலை ஊழியர் வரை மொத்தம் 16 பேர் உள்ளனர். அதில் 7 பேருக்குக் கடந்த 1975-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து மத்திய சமூகநலக்குழு சம்பள உதவி செய்கிறது.

## மத்திய சமூகநலக் குழுவின் திட்டங்கள் :

### 1. ஆண்டு மானியமும்—ஒரு கால வரையறைக்குட்பட்ட மானியமும் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் தன் விருப்ப (Voluntory) நிறுவனங்களினால் நடத்தப்படும் அனாதை இல்லங்களுக்கும், ஏழைக் குழந்தைகளுக்கான ஆரம்பப்பள்ளிகளுக்கும், திக்கற்றவர்களுக்கு இருக்க இடமும் வைத்திய வசதிகளும் செய்து கொடுப்பதற்கும் மானியம் வழங்கப்படுகிறது. இவ்வகையில் ஆண்டு மான்யம் பெற்று 269 நிறுவனங்களும், காலவரையறைக்குட்பட்ட மானியம் பெற்று (Plan period grant) 80 நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.



### 2. கிராம மறுமலர்ச்சி மானியம்

1961-62-ல் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்ட பின், கிராம வளர்ச்சிக்கான அநேகத் திட்டங்கள், மத்திய சமூகநலக் குழுவினரிடமிருந்து பஞ்சாயத்துக்களின் கீழ் மாற்றப்பட்டன. குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களும், கைத்தொழில் நிறுவனங்களும், எல்லா தாய்சேய் மருத்துவ இல்லங்களும் பஞ்சாயத்துக்களால் மத்திய சமூகநலக் குழுவிடமிருந்து 75 சத மானியம் பெற்று நடத்தப்படுகிறது. மொத்தம் 34 வட்டங்களிலுள்ள 14 நிறுவனங்கள் இந்த மானியம் பெற்று வருகின்றன.

### 3. விடுமுறை முகாம்கள் ஏற்படுத்தும் திட்டம்

(Holiday Camps) 10-லிருந்து 16 வயதுக்குட்பட்ட, 30 அல்லது 40 ஏழைக்குழந்தைகளைக் கோடை விடுமுறையில், பார்க்கத் தகுந்த இடங்களில் 15 நாள் விடுமுறை முகாம்களமைத்து அழைத்துப் போக, மத்தியக்குழு ரூபாய் 3,000 தருகிறது. இதனால் அனாதைக் குழந்தைகள், புதிய புதிய இடங்களைப் பார்க்கவும், எல்லோரோடும் சேர்ந்து பழகவும் ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் அனைவரும் ஒரு குடும்பம் போல் பழகி தம்மில் மறைந்திருக்கும் எல்லாவிதக் கலைகளையும் திறமைகளையும் வெளியாக்க ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. 1975-76-வது ஆண்டில் இதுபோல் 20 முகாம்கள் நடத்தப்பட்டன.

### 4. பெண்களுக்குக் குறைந்த கால கல்வி கற்பிக்கும் திட்டம்

படிக்க முடியாத நிலையில் இருக்கும் பெண்களுக்கு, மறுபடியும் தொடர்ந்து கல்வி பயின்று பிழைப்புக்காக ஏதாவது ஒரு வேலை செய்யும் வாய்ப்பு இத்திட்டத்தின் மூலம் ஏற்படுகிறது. 18 வயதிலிருந்து 30 வயது வரையுள்ள பெண்களுக்கு இதன் மூலம் நல்வாழ்வு கிடைக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 2 ஆண்டுக் காலத்தில் ஆரம்பப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்கு (E.S.L.C.) அல்லது பள்ளி இறுதி வகுப்புத் தேர்வுக்கு (S.S.L.C.) பயிற்சி அளிக்கப்படுகிறது. சமீபத்தில் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தோல்வியுற்ற மாணவிகள் மறுபடியும் ஓர் முறை தேர்வு எழுத அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 8 கல்வி நிறுவனங்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றன.

### 5. கைத்தொழில் பயிற்சி அளிக்கும் திட்டம்

1975-வது ஆண்டிலிருந்து மற்றுமொரு புதிய துறையில் பெண்கள் முன்னேற மத்திய சமூக நலக் குழு வகுத்தளித்த திட்டமாகும் இது. படித்தும் பலனில்லாமல் வேலையற்றிருக்கும் பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் பலவகையான வேலை கற்றுத்தரப்படுகிறது. தையற்கலை, காரியதரிசி பதவிக்குரிய வேலைகள், வானொலி மெக்கானிசம், மருத்துவ நிலையங்களில் உதவி செய்தல், வீட்டு மேற்பார்வையாளர் வேலை, புகைப்படமெடுத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சி முடிந்ததும், தக்க சான்றுகளுடன் வேலையும் தரப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய சமூகநலக்குழுவால் 1975-76-ஆம் ஆண்டில் 12 நிலையங்களும் 1976-77-ல் 10 நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

### 6. சமூகப் பொருளாதாரத் திட்டங்கள்

(Socio Economic Plan) புதிய புதிய தொழில்கள் துவக்கப்படுவதன் மூலம், பெண்களுக்கு நேரடியாக வேலை செய்து ஊதியம் பெறும் வாய்ப்பு ஏற்படுகிறது. தற்சமயம், அச்சுவேலை, தச்சுவேலை, ரொட்டி செய்யும் பேக்கரிகள், கைத்தறி நெசவு வேலை, விளையாட்டுச் சாமான்கள் செய்தல் போன்ற 20 நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவைகளில் பெண்கள் வேலை செய்து வருகின்றனர். இவற்றிற்குத் தேவையான யந்திரங்கள், மற்றும் தேவையான சாதனங்கள் வாங்குவதற்கும் முதலீட்டுக்கான தொகைக்கும் தேவையான நிதியை மொத்தமாகவே மத்திய சமூகநலக்குழு கொடுக்கிறது. இந்நிதி உதவி ஆண்டுதோறும் கிடைக்காது. ஏனென்றால், இந்நிறுவனங்கள் வியாபார ரீதியில் நடந்து இலாபமடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.



## 7. பால்பண்ணைகள் அமைக்கும் திட்டம்

கிராமத்திலுள்ள ஏழைப் பெண்களுக்காகவே இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது. கிராமச் சூழ்நிலைகாரணமாக, பசுக்களுக்கு ஏற்ற மேய்ச்சல் நிலம் நிறைய இருப்பதால், முக்கியமாக கிராமத்திலுள்ள ஏழைப் பெண்கள் பால் பண்ணை ஏற்படுத்துவதற்குப் பண உதவி மானியமாகவும், கடனாகவும் அளிக்கப்படுகிறது. பசு அல்லது எருமை வாங்கவும், அவைகள் வளர்ப்புக்கு வேண்டிய சாதனங்கள் வாங்கவும் கடன் கொடுக்கப்படுகிறது. இரண்டு மாதத்திற்குத் தேவையான மாட்டுத் தீவனம் வாங்க மானியமாகப் பணம் தரப்படுகிறது. தனியார் நிறுவனங்களின் மூலமாக இத்தொகை 1976-77-ல் 14 நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் 70 பெண்கள் பலனடைகிறார்கள்.

## 8. வேலை செய்யும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்து உதவும் திட்டம்

ஏராளமான பெண்கள் வேலை செய்ய வேண்டி, தத்தம் ஊரைவிட்டு வெளியூர் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கு அவர்கள் எவ்விதப் பயமுமின்றி சௌகரியமாகத் தங்குவதற்கான இடவசதி மிகவும் அவசியமாகும். எனவே, வேலை செய்யும் பெண்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தர சில தனியார் நிறுவனங்கள் முன் வந்துள்ளன. இதன் மூலம் வேலை செய்யும் பெண்களுக்கு இருக்க இடம். உண்ண நல்ல தரமான, சத்தான உணவு, தம் வீட்டிலிருப்பதைப் போன்ற சூழ்நிலை உண்டாகும்வழி கிடைக்கிறது. இவ்விடுதிகளை நடத்துபவர்களுக்கு விடுதியாளர் (வார்டன்) சம்பளம், கட்டட வாடகை பண்ட பாத்திரங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காக மத்திய சமூக நலக்குழு பணம் தருகிறது. தற்சமயம் இத்தகைய விடுதிகள் 7 இருக்கின்றன.

## 9. தத்து எடுத்தவர்களுக்கு உதவும் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள கில்டு ஆப் ஸர்வீஸ் ( Guild of Services ) நிறுவனத்தினரால் பரீட்சார்த்தமாக இம்முறை கையாளப்பட்டது. அனாதை இல்லங்களிலுள்ள குழந்தைகளுக்குத் தாம் அனாதைகளென்ற ஏக்கம், ஏற்படாமலிருக்க இக்குழந்தைகளை வளர்க்க விரும்புகிறவர்களிடம் அவர்கள் குடும்பத்தில் ஒருவராக வளர இக்குழந்தைகள் அனுப்பப்படுகின்றனர். அனாதைக் குழந்தைகளைத் தத்து எடுக்கும் பெற்றோர்களுக்கு அக்குழந்தைகளின் பராமரிப்புக்காக வேண்டி ஒரு குறித்த தொகை மாதாமாதம் தரப்படுகிறது.

## 10. சத்துணவு தரும் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கு உதவும் திட்டம்

குழந்தைகளின் அறிவும் ஆற்றலும் வளர சத்துணவு தருவது மிகவும் இன்றியமையாததாகும். எனவே, குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் சத்துணவு அளிக்கப்படுகிறது. இவ்வாறு சத்துணவு தரும் 119 குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கு-சத்துணவு தருவதற்காக-சமூக நலக்குழு தனியாகப் பணம் தருகிறது.

இவைகள் தவிர, சமூக நலக்குழு இந்திய அரசின் பணிகளிலும் பங்கெடுத்துக் கொள்கிறது. இவ்வகையில் 31 திக்கற்ற குழந்தைகளின் பராமரிப்பு இல்லங்களையும், தத்து எடுத்துக் கொள்ளும் நிலையத்தையும், 13 நடமாடும் மருத்துவ மனையையும் பராமரிக்கும் பணியில் இந்திய அரசுக்குச் சமூக நலக்குழு உதவுகிறது. சில இடர்பாடுகளுக்குப் பிறகு தற்போது மாநில சமூகநலக்குழு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. ஏழைகளுக்கு அதிலும் பெண்களுக்கு உதவும் திட்டங்கள் ஏராளமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவைகளில் மிக வேகமாக முன்னேற்றம் காண முடியவில்லையென்றாலும், நிதானமாக ஆனால் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

## சமுதாய பணியில் தமிழக மகளிர்

மாநில சமுதாயப் பணியில் நம் தமிழ்நாட்டுப் பெண்மணிகள் பலர் வெகு தீவிரமாக எத்தனையோ முன்னேற்றங்களை படிப்படியாக ஏற்படுத்தியிருக்கின்றனர். அவர்களில் திருமதி. வெங்கட சுப்பராவ், டாக்டர் முத்துலட்சுமிரெட்டி, திருமதி. ருக்மணி லட்சுமிபதி, திருமதி. ராதாபாய் சுப்பராயன், திருமதி. அம்புஜம்மாள், திருமதி அம்மு ஸ்வாமிநாதன், திருமதி. துர்காபாய்தேஷ்முக் அவர்களைக் குறிப்பிடலாம்.

விதவைகள் மறுவாழ்வு பெற பெரிதும் பாடுபட்டவர்களில் சகோதரி எஸ். சுப்புலட்சுமி அம்மாள் அவர்களைக் குறிப்பிடலாம்,

தமிழ்நர்ட்டுப் பெண்களாகிய நாம் இத்தகைய வீராங்கனைகளை கொண்டிருந்ததில் மிகவும் பாக்கியசாலிகளென்றே சொல்ல வேண்டும்.

தற்சமயம் நம் தமிழ்நாட்டு சகோதரி திருமதி. சரோஜினி வரதப்பன் அவர்கள் மத்திய சமூகநலக் குழுவின் தலைவராயிருப்பது நமக்கெல்லாம் எவ்வளவோ பெருமை தரத்தக்கதாகும். சமூகநலச் சேவையை மேற்கொண்டு இவர் ஆற்றிய தொண்டுகள் ஏராளம். சமூகநலச் சேவையில் பல்லாண்டு அனுபவம் உள்ள இவர் தற்போது சமூக நலக் குழுத் தலைவியாக இருப்பதால் பல நல்ல திட்டங்களை வகுத்து அவைகளைச் செயலாக்குவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்.

நம் தமிழ்நாட்டுச் சமூகநலக் குழுவின் தலைவராக உள்ள திருமதி. தாரா செரியன் அவர்கள் சமூகநலச் சேவையில் அதிக ஆர்வமும், அனுபவமும் உடையவர். தமிழ்நாட்டின் முதல் பெண் மேயராக இருந்த இவர் தலைமையில், சமூக நலக் குழுவினர் வெகு ஆர்வத்துடன் சேவை செய்ய முற்பட்டுள்ளனர். இவர்களோடு மக்களனைவரும் ஒத்துழைத்து நாட்டின் வறுமையையும், பிற்பட்ட நிலையையும் ஒழிக்க முன்வர வேண்டும். மேற்கூறப்பட்ட சில வீரப் பெண்மணிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்தால் சமூக நலம் செழிக்கும் என்பதில் ஐயமே இல்லை!

# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

**ரூ. 20½ இலட்சத்திற்கு**
**11,116 பரிசுகள்**

*ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட*
*11,116 பரிசுகள் உண்டு.*

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

*ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/–க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.*

*உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.*


*விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



# பாலாகார்

## ஊட்டச் சத்து மிகுந்த மலிவு விலை உணவு



'பாலாகார்' (Balahar) என்பது ஊட்டச்சத்து மிகுந்த, மலிவு விலை உணவாகும். ஒரு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திப் படிப்படியாகத் திட உணவு அளிக்கவும், பள்ளி முன்னிலைப் பருவக் குழந்தைகளுக்கு கொடுக்கவும் இவ்வுணவு மிகவும் சிறந்ததாகும்.

மாவு வடிவில் தயாரிக்கப்படும் 'பாலாகார்' உணவு, காய்கறி புரதச் சத்து, தானியங்கள்: பயறு வகைகள் ஆகியவை கலந்த ஒரு கலவையாகும். இதில் தகுந்த அளவுக்கு உயிர்ச்சத்துக்களும் (Vitamins), தாதுப் பொருள்களும் கலக்கப்பட்டுள்ளன. 'பாலாகார்' 20 சதம் புரதச்சத்து (Protein) அளிக்கிறது. 100 கிராம் 'பாலாகார்' உணவு 360 கலோரி (Calories) சக்தியை அளிப்பதுடன், இன்றியமையாது தேவைப்படும் உயிர்ச்சத்துக்களையும் தாதுப் பொருள்களையும் அளிக்கின்றது.

இது ஒரு சிறந்த சமநிலை உணவாகும் (well-balanced food). தாய்ப்பால் குடிப்பதை மறக்கச் செய்து, திட உணவு உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டிய நிலையில் உள்ள குழந்தைகளுக்கு இவ்வுணவு மிகமிக ஏற்றதாகும்.

வயது வந்தவர்களுக்குத் தேவைப்படுவதைவிட, குழந்தைகளுக்கு அதிக அளவு புரதச் சத்துத் தேவைப்படுகிறது. ஏனெனில், குழந்தைகளின் வளர்ச்சிக்கும், அவைகளின் பராமரிப்புக்கும் புரதச்சத்து இன்றியமையாத ஒன்றாகும். ஒரு குழந்தையின் வழக்கமான உணவுடன் துணை உணவாக அளிக்க சக்தி வாய்ந்த இவ்வுணவில் 75 கிராம் போதுமானதாகும்.

'பாலாகார்' உணவை மிக எளிதில் கஞ்சியாகத் தயாரித்து குழந்தைகளுக்கு அளிக்க முடியும். 'பாலாகார்' மாவை 3 முதல் 4 நிமிடம் கொதிக்க வைத்து, சர்க்கரை அல்லது உப்பினைத் தேவைப்படும் சுவைக்கேற்பக் கலந்தால் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கு ஏற்ற கஞ்சி கிடைத்துவிடும். பல்வேறு பொதுவான உணவுத் தயாரிப்புகளுக்கு உதவும் பொருள்களுடன் 'பாலாகார்' மாவைக் கலந்து, சிறந்த சத்துமிக்க உணவைத் தயாரித்திட முடியும். குழந்தைகளுக்கும், நோயினால் எளிதில் தாக்கப்படக்கூடிய நிலையில் இருப்பவர்களுக்கும் தேவைப்படும் துணை ஊட்டச் சத்துத் தேவையை ஈடு செய்யும் வகையில் 'பாலாகார்' உணவு தயாரிக்கப்படுகிறது.


நமது நாடெங்கிலும் பள்ளிக் குழந்தைகள், பள்ளி முன்னிலைப் பருவக் குழந்தைகள், கருவுற்ற மகளிர்கள், குழந்தை

களுக்குப் பாலூட்டி வரும் தாய்மார்கள் ஆகியவர்களுக்கு, ஊட்டச்சத்து உணவு அளிக்கும் பல்வேறு திட்டங்களில் 'பாலாகார்' தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆதிவாசி மக்கள் வசிக்கும் பகுதிகளிலும், நகரங்களின் குடிசைப் பகுதிகளிலும் இந்திய அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின்கீழ், 'பாலாகார்' உணவு வழங்கப்படுகிறது.

**'பாலாகார்' மாவைப் பயன்படுத்தும் வழி முறைகள்**

'பாலாகார்' மாவு கட்டியாகப் போயிருந்தால் அதைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். கஞ்சியாகச் சமைப்பதற்கு முன்பு, 'பாலாகார்' மாவை இளக்கமான பசையாகத் தயாரித்துக் கொள்ள வேண்டும். பல்வேறு தயாரிப்புகளுக்கு ஏற்ப, சமைக்கும் நேரம் மாறுபடக் கூடும்.

நாட்டு மக்களின் நலன் கருதி, 'பாலாகார்' மூலம் தயாரிக்கப்படக் கூடிய சில தயாரிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



**'பாலாகார்' கஞ்சி'**

தேவையான பொருளும் அளவும்:—

'பாலாகார்' 1 கிண்ணம்

தண்ணீர்—3 முதல் 4 கிண்ணம்

சர்க்கரை அல்லது உப்பு—சுவைக்கு ஏற்ப


செய்முறை:

சிறிதளவு தண்ணீரில் 'பாலாகார்' மாவைக் கலந்து, நன்கு கலக்கி, பசையாகத் தயாரித்துக் கொள்ளவும்.

அப்பசையைத் தொடர்ந்து கலக்கிக் கொண்டே, 5 நிமிட நேரம் கொதிக்க வைக்க வேண்டும். கஞ்சி கெட்டியாக இருந்தால், மேலும் அதிகத் தண்ணீர் விடவும்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைக்க வேண்டும். கொதிக்கும் தண்ணீருடன் முன்பே தயாரிக்கப்பட்டுள்ள பசையைத்—தொடர்ந்து கலக்கிக் கொண்டே-சேர்க்க வேண்டும்.

தேவையான சுவைக்கு ஏற்ப சர்க்கரை அல்லது உப்பினைக் கலக்க வேண்டும்.



**'பாலாகார்' பூரி**

தேவையான பொருளும் அளவும்:

'பாலாகார்'-1 கிண்ணம்

உப்பு—சுவைக்கு ஏற்ப.

தண்ணீர்—பூரி மாவாகச் செய்வதற்குப் போதிய தண்ணீர்.

எண்ணெய்—பூரி சுடுவதற்குத் தேவையான அளவு.


செய்முறை:—

'பாலாகார்' மாவுடன் தேவையான அளவு தண்ணீரையும், உப்பையும் சேர்த்து பூரி செய்வதற்கு ஏற்ற அளவில் மாவாகச் செய்து கொள்ளவும்.

மாவை நன்கு பிசைந்து, 15 முதல் 20 நிமிடம் வைத்திருக்கவும்.

பிறகு மாவை எடுத்துச் சிறு உருண்டைகளாகச் செய்யவும். அதன்பின் ஒவ்வொரு உருண்டையையும் பூரிக்கட்டையால் தேய்த்து வட்ட வடிவமாகச் செய்து கொள்ளவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு, பூரியைப் பொரித்து எடுத்துச் சூடாகப் பரிமாறவும்.



**'பாலாகார்' சப்பாத்தி**

தேவையான பொருளும் அளவும்:

'பாலாகார்'—1 கிண்ணம்

வெந்நீர்—சப்பாத்தி மாவு செய்வதற்குப் போதிய அளவு.


செய்முறை: —

'பாலாகார்' மாவில் போதிய அளவு வெந்நீர் சேர்த்து மிருதுவான மாவாகச் செய்து கொள்ளவும்.

மாவை நன்கு பிசைந்து கொண்டு, சிறு சிறு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். பிறகு சப்பாத்திகளாகச் செய்து கொள்ளவும்.

சூடான வாணலியில் (தோசைக்கல்) ஒவ்வொரு சப்பாத்தியாக வைத்து, எண்ணெய் ஊற்றாமல் வேகச் செய்யவும்.

இருபக்கமும் நன்கு வெந்த பிறகு, சப்பாத்தியை எடுத்துச் சூடாகவே பரிமாறவும்.



'பாலாகார்' அல்வா

தேவையான பொருளும் அளவும்:

'பாலாகார்'—1 கிண்ணம்

சர்க்கரை—1 கிண்ணம்

நெய்—½ கிண்ணம்

தண்ணீர்—¾ கிண்ணம்

செய்முறை:—


'பாலாகார்' மாவையும், தண்ணீரையும் சேர்த்து இளக்கமான பசையாகச் செய்து கொள்ளவும்.

சர்க்கரைப்பாகு—மூன்றில் ஒரு பங்காகக் குறையும் அளவுக்கு—தயாரித்துக் கொள்ளவும்.

சர்க்கரைப் பாகு அடுப்பில் இருக்கும் போதே, 'பாலாகார்' பசையை அதில் ஊற்றவும். பிறகு நெய்யை ஊற்றி கலக்கிவிடவும்.

'அல்வா' தயாரிக்கும் பாத்திரத்தின் பக்கங்களில் அல்வா ஒட்டிக்கொள்ளாமல் கலக்கிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த நிலைக்கு வந்தவுடன் அடுப்பிலிருந்து எடுத்து ஏலக்காய்ப் பவுடரைத் தூவி விடவும். ஏலக்காய்ப் பவுடரை நன்கு கலக்கச் செய்து, நெய் தடவிய தட்டில் வார்த்துக் கெட்டியாகப் படியச் செய்யவும்.

அதன் மேல் சுவைக்கு ஏற்ப முந்திரிப் பருப்பு போன்றவைகளைத் தூவி விட்டு, விரும்பும் வடிவத்தில் அல்வாவைத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.



'பாலகார்' தோசை

தேவையான பொருளும் அளவும்:

'பாலாகார்' 1 கிண்ணம்

தண்ணீர்—தோசை மாவாகச் செய்வதற்குப் போதிய அளவு.

உப்பு—சுவைக்கு ஏற்ப.

செய்முறை—

'பாலாகார்' மாவைத் தண்ணீர் சேர்க்காமல் ஏறத்தாழ 10 நிமிடம் வரை நீராவியில் வேகச் செய்யவும்.

நீராவியில் வெந்த மாவை, தண்ணீருடன் சேர்த்து, தோசை மாவாகக் கலக்கிக் கொள்ள வேண்டும்.

அந்த மாவில் ஒரு கரண்டி நிறைய எடுத்துக் கொண்டு, சூடான தோசைக் கல்லின் மேல் ஊற்றி, ஒரே சமமாக மாவைப் பரப்பிட வேண்டும்.


சிறிதளவு எண்ணெய்யில் தோசையை வேகச் செய்யவும். சூடாகப் பரிமாறவும்.

'பாலகார்' கொழுக்கட்டை

தேவையான பொருளும் அளவும்:—

'பாலாகார்' (வாசனைத் திரவியம் கலந்தது)—1 கிண்ணம்

தண்ணீர்—சிறு அளவு



தேங்காய்த் துருவல்—3 மேசைக்கரண்டி

வெல்லம் (தூள்)—3 மேசைக்கரண்டி

செய்முறை:—

'பாலாகார்' மாவில் சிறு அளவு தண்ணீர் கலந்து இளக்கமான மாவாகச் செய்து கொண்டு, சிறு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.

தேங்காய்த்துருவல், வெல்லம் ஆகிய இரண்டும் கலந்த கலவையைத் தயாரிக்கவும்.


ஒவ்வொரு உருண்டையையும் உங்கள் கையில் வைத்துத் தட்டையாகத் தட்டிக் கொள்ளவும். அதில் ஒரு தேயிலைக் கரண்டி அளவு தேங்காய்த் துருவல்-வெல்லக் கலவையை வைத்து மூடி உருண்டையாகச் செய்யவும்.

உருண்டைகளை நீராவியில் வேக வைக்கவும்.

வெந்தபின் சூடாகப் பரிமாறவும்.



# வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாழைப்பழ ஏற்றுமதித் திட்டம்



தமிழ்நாடு கூட்டுறவுப் பதிவாளரின் ஆணைப்படி, குடியாத்தம் வட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம் அயல் நாட்டுக்கு வாழைப் பழம் ஏற்றுமதி செய்யும் திட்டத்தை மேற் கொண்டுள்ளது. வாழைப்பழம் மற்றும் பழம் ஏற்றுமதி கார்ப்பொரேஷனின் துணை கொண்டு இந்நடவடிக்கையில் இந்த விற்பனைச் சங்கம் இறங்கியுள்ளது. வடார்க்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் சேம்பள்ளி, ஜங்காலபள்ளி, பேர்ணம்பட்டு, கிருஷ்ணபுரம், வெங்கட்டாபுரம் மற்றும் கௌராபேட்டை ஆகிய கிராமங்களில் 'ரோபஸ்தா', 'கேவண்டீஸ்' போன்ற ஏற்றுமதிக்குரிய வாழைப் பழ ரகங்களை விவசாயிகள் பயிர் செய்கின்றனர். தனியார் வியாபாரிகளிடம் முன் பணம் பெற்று அவர்கள் பிடியில் சிக்குண்டிருந்த இம்மக்களை விடுவித்து விற்பனை சங்கமே அவர்களுக்கு முன் பணம் வழங்கி வாழைப்பழ மகசூலைக் கொள் முதல் செய்ய முற்பட்டுள்ளது.

அறுவடைக்குரிய பருவத்தை எய்துவதற்கு இரண்டு திங்கட்கு முன்னர், குடியாத்தம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தனி அலுவலரும், வாழைப்பழம் மற்றும் பழம் ஏற்றுமதி கார்ப்பொரேஷனின் உதவி கொள் முதல் அலுவலரும், வாழை பயிரிட்டுள்ள தோட்டங்களைப் பார்வையிட்ட பின், அவைகளுக்குரிய முன் பணங்களை விற்பனைச் சங்கம், சம்பந்தப் பட்ட விவசாயிகளுக்கு வழங்குகிறது. அறுவடையின்போது மகசூலைப் பெற்று வாழைப் பழம் மற்றும் பழம் ஏற்றுமதி கார்ப்பொரேஷன் மூலம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறது.

வாழைப்பழ மகசூலுக்கு முன் பணம் வழங்கும் காரியத்துக்காக வேலூர் கூட்டுறவு மத்திய வங்கி, குடியாத்தம் வட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்துக்கு ரூ. 3 இலட்சம் கடன் நிதியுதவியை அனுமதித்துள்ளது. பிப்ரவரி, மார்ச் திங்களில் மட்டும் இந்த விற்பனைச் சங்கம் வாழைத் தோட்ட விவசாயிகளுக்கு ரூ. 1,60,500 வரை முன் பண உதவியை வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தினால் இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழைப் பழ மகசூலுக்கு நியாயமான எடையின் மூலம் நல்ல விலை பெற்றுள்ளனர். தற்போது டன் ஒன்றுக்கு வாழைப்பழத்துக்கு ரூ. 550 விலை வழங்கப்படுகிறது. முன்பு தனியார் வியாபாரிகள் மூலம் கிடைத்த விலையை விட இது கூடுதலாக உள்ளதை உணர்ந்த விவசாயிகள் கூட்டுறவின் உதவியைப் பெரிதும் வரவேற்று உள்ளார்கள்.

( 4 -ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிராமியப் பகுதிகளில் உள்ள மக்களை விவசாயம் சிறந்த குடிசைத் தொழில், பால் பண்ணை பராமரிப்பு, உணவு, உடை இருப்பிடம் ஆகிய மக்களின் அன்றாட பிரச்சினைகள் போன்றவற்றிற்கு முழுவதுமாக, லாபகரமாக திருப்தியுடன் வேலை செய்ய வைக்க வேண்டும். இதை நாம் செய்யாத வரையில் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஏற்றத் தாழ்வைப் போக்க, கணிசமான முன்னேற்றம் காண்பது என்பது முடியாத ஒன்று.

நிகழக்கூடிய எந்த ஒன்றும் கெட்ட நோக்கங்கள் காரணமாக ஏற்படுவதில்லை. நோக்கங்கள் நல்லவையாக இருக்கலாம்; ஆனால் நோக்கங்கள் எப்போதும் நல்ல நடவடிக்கைகளைத் தருவதில்லை. **செயல்படுத்துவதற்கு முன்னால் நோக்கங்கள் முறையாக விரிவாக பரிசீலிக்கப்பட வேண்டும்.** ஆகவே இந்த விஷயங்களை நாம் பூரணமாகவும் விரிவாகவும் பரிசீலிக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், நாட்டு மக்களின் மகிழ்ச்சியின் பெரும்பங்கு உங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின்போது பின்பற்றப்பட்டு வந்த அதே பழைய முறையிலேயே நாம் செயல்பட்டு வந்திருக்கிறோம். தெருவிலுள்ள மனிதன் முக்கியமாக இல்லாதபோது அரசாங்கத்தை நடத்துவது என்பது முக்கியமானதாகும். அரசாங்கத்தை நிர்வகிப்பவர்களின் சொந்த வாழ்க்கையைத் திருப்திபடுத்துவதற்காக நடத்தப்படுவதல்ல அரசாங்கம். நாட்டு மக்களின் அனுகூலத்திற்காக, அவர்களின் மகிழ்ச்சிக்காக, அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்காக அச்சம் இன்றி மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழ்க்கை நடத்தப்படுவதற்காக நடத்தப்படுவது அரசாங்கம். இந்த நோக்கம் நம் அனைவராலும் உணரப்படாதவரையில் நாம் அதிக முன்னேற்றத்தைக் காண முடியாது என்று நான் பயப்படுகிறேன். ஒவ்வொரு கட்டத்திலும் இதையேதான் நாம் உணர வேண்டும்.

**ஒவ்வொரு மனிதனின் சுய மரியாதையும் என்னுடைய சுயமரியாதையைப் போல் அவ்வளவு முக்கியமானதாகும்.** நான் என் சுய மரியாதையை கடைசி மனிதனிடமும் பாதுகாக்காத வரையில் என்னுடைய சுயமரியாதையையும் பாதுகாக்க முடியாது. ஒவ்வொருவரைப்பொறுத்த வரையிலும் இதுவேதான் உள்ளுணர்வாக இருக்க வேண்டும். ஆனால் இதை நாம் மறந்துவிட்டோம். **மிகவும் ஏழ்மையான ஒரு மனிதன் இந்த நாட்டில் பிரதமராலோ, ராஷ்டிரபதியாலோ அவமானப்படுத்தப்பட்டால், அவர்களைப் பார்த்து "முறையாக நடந்து கொள்ளுங்கள். ஜாக்கிரதையாக இருங்கள்" என்று எச்சரிக்கும் தைர்யமும் அவனுக்கும் வரும் ஒரு நாளைக் காண நான் விரும்புகின்றேன்.** ஒவ்வொரு நபரும் இதை மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இது விஷயத்தில் மக்களுக்கு போதிப்பது, நம்முடைய தனிப்பட்ட நடத்தை ஆகியவற்றின் மூலம் இது நடக்கக்கூடும். இதுவும் சம அளவுக்கு முக்கியமான ஒரு பணியாகும்.

மற்ற பெரும்பாலான நாடுகளைக் காட்டிலும் இந்த நாட்டு மக்கள் உண்மையில், சொல்லப்போனல் சராசரிக்கும் மேலாக புத்திகூர்மை படைத்தவர்கள். மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிக நிபுணத்துவம் வாய்ந்தவர்களை நாம் பெறலாம். ஆனல் அச்சத்தின் காரணமாக நாம் தன்னம்பிக்கையை இழக்கிறோம். அச்சத்தை நீக்கித் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டியிருக்கிறோம். அச்சம் நீக்கப்படாத வரையில் தன்னம்பிக்கை வளர்க்கப்படாதவரையில், நீங்கள் திட்டமிடுவது நீங்கள் செய்ய விரும்புவது ஆகியவை நீங்கள் எப்படி நடைபெற வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படிச் செய்ய முடியாது. நம்மீது நம்பிக்கை வைத்திருப்பவர்கள் மக்கள். மேலும் இது ஒரு புதுவிதமான அமைதிப் புரட்சி. இது நியாயப்படுத்தப்பட வேண்டும். அது ஓர் அமைதியான புரட்சி. அது வெறும் தேர்தல் மட்டுமல்ல. அரசாங்கத்தின் மாற்றம் மட்டும் அல்ல. மக்கள் மகத்தான ஆற்றல் திறனைக் காண்பித்திருக்கிறார்கள். **ஜனநாயக உலகின் கண்பார்வையில் இந்த நாட்டின் நற்பெயர், நன்மதிப்பு மிகவும் கீழாக மூழ்கியிருந்தது. ஆனல் அது இன்றைக்கு வான் அளவுக்கு உயர்ந்திருக்கிறது.** மற்ற நாடுகளில் இல்லாமல் இந்த நாட்டில் மட்டுமே நடந்திருக்கக் கூடியது. என்று பெரும்பாலான நாடுகள் இப்போது கூறுகின்றன. இப்போது இந்த நாட்டில் இன்றைக்கு இருக்கும் மரியாதை இது. இதே உணர்வில் நம்முடைய பணிகளை தொடர்ந்து நடத்தி, அதற்குத் தகுதியுள்ளவர்களாக இருந்து இந்த மரியாதைகளையும் தக்க வைக்க வேண்டும்.

நீங்கள் விரும்பியது போல நம்முடைய திட்டங்களைத் திருத்தியமைப்பதில் எந்த வித இடையூறும் இருக்காது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. மக்கள் திருப்தியடையும்வரை சரியான பாதையில் நாம் செயல்படவேண்டும். அதுதான் அதிக முக்கியம் வாய்ந்ததாகும். நாம் இதைச் செய்யாத வரையில் மக்களின் நம்பிக்கை ஒருபோதும் பாதுகாக்கப்படமாட்டாது. மக்களின் நிலைமைகளில் மாற்றமும், அவர்களுடைய உண்மையான தேவைகள் பூர்த்தியும் செய்யப்படாதவரையில் அவர்கள் திருப்தியடையமாட்டார்கள். அவர்களது தேவைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அவர்கள் அதிருப்தி அடைவார்கள் என்பது இயற்கையே. அவர்கள் அதிருப்தி அடைவார்களேயானல் நிறைவேற்றப்படும் பணிகள் குறைவதோடு அன்றி, முன்னேற்றமும் குறையும். ஆகவே முழு நம்பிக்கையுடன் நீங்கள் செயல்படவே நான் விரும்புகிறேன். எந்த ஒரு சேவையிலும் நம்முடைய சேவைகள் ஒருபோதும் தாழ்ந்ததில்லை என்று நான் கருதுகிறேன். ஆனல் நமது போக்கு மாறவில்லை. ஒருவேளை மாறியிருக்கலாம், ஆனல் முழுவதுமாக மாறிவிட்டது என்று என்னல் சொல்ல முடியாது. அப்படிச் சொல்வதும் தவருக இருக்கலாம். லாபம், சம்பளம், அல்லது எதிர்கால சுபிட்சத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம். உண்மையில் அது இயற்கையானதே. ஆனல் நமக்கு சம்பளம் வழங்கும் நாட்டு மக்களை திருப்திப்படுத்துவதையே நீங்கள் அதிகம் சிந்திக்கவேண்டும். நாம் இப்போதிருக்கும் பணியில், மேற்கொண்டிருக்கும் பணிகளில் நாம் அனைவரும் சுயமாகவே வலுவில் வந்திருக்கிறோம். நம் அனைவரையும் யாரும் வலுக்கட்டாயப்படுத்தி இந்தப் பொறுப்பை ஏற்கவைக்கவில்லை. நாமே அதைத் தெரிந்தெடுத்துள்ளோம். அப்படி நாமே தெரிந்தெடுத்துள்ளதால், நாமே மக்களைத் திருப்திபடுத்த வேண்டும். எந்த ஒன்றில் இருப்பதைக் காட்டிலும் அதிகப்படியான திருப்தியை, மனநிறைவை நாம் மக்களுக்குச் சேவை புரிவதன்மூலமே பெறமுடியும். அர்ப்பணிக்கப்பட்ட சேவைகளில் அதிக திருப்தியிருக்கிறது. நாட்டில் இந்த உணர்வு வளரும் என நான் கருதுகிறேன். இத்தகைய உணர்வு இந்த இடத்திலிருந்து எல்லா இடத்திற்கும் பரவும் என்ற நம்பிக்கையிலேதான் உங்கள் மத்தியில் சிறப்புரை ஆற்றியுள்ளேன். உங்கள் அனைவருக்கும் என் நன்றி.''

**[திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்தும் முறைகள் பற்றிய கருத்தரங்கைப் புது டில்லியில் 25–4–1977 அன்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் துவக்கி வைத்துப் பேசிய உரையின் தமிழாக்கம்.]**

# "கொள்ளை இலாப நோக்கு சமூக விரோதப் போக்கு!"

## பிரதமர் உரை

"நாட்டிலுள்ள ஒவ்வொரு இல்லத்தையும், தனிநபரையும் பாதிக்கின்ற விலைவாசிப் பிரச்சினை பற்றி நான் உங்களுடன் பேசுகிறேன். இந்த ஆண்டு பிப்ரவரி 25-ந் தேதி முதல் மொத்த விலைக் குறியீட்டெண் இறங்குமுகமாக உள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்கள், பருத்தி, தேயிலை, பருப்பு வகைகள் போன்ற சில பண்டங்களின் விலைகள் ஏறுமுகமாக இருந்தன. எல்லா மட்டங்களிலுமுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பண்டங்கள் இவை என்பதை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள். தற்போதுள்ள விலைகளைக் குறைப்பதற்கு எங்களால் இயன்ற அனைத்தையும் நாங்கள் செய்வதோடு, பதுக்கல்காரர்களிடமுள்ள சரக்குகளை வெளிக் கொணர்ந்து, தேவைப்படும் இடங்களில் இறக்குமதியை ஊக்குவித்துப் பற்றாக்குறையையும் சரி செய்ய ஆவன செய்வோம் என்று நுகர்வோருக்கு நான் உறுதியளிக்க முடியும்.

"எனவே, உணவு தானியங்கள், இதர அத்தியாவசியப் பண்டங்கள் இவற்றின் விநியோகத்தில் எந்தவிதமான பற்றாக்குறையும் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. எது எப்படியிருந்தாலும் சாமானிய மனிதனின் தேவையின் பெரும்பகுதியைப் பூர்த்தி செய்யும் உணவு தானியங்களைப் பொறுத்த வரையில் இவற்றின் கையிருப்பில் திருப்திகரமான சூழ்நிலை நிலவி வருகிறது. காரீப்-ராபிப் பயிர்களின் விளைச்சல் திருப்திகரமாக உள்ளது என்பது யாவரும் அறிந்த விஷயமாகும். அப்படியிருக்கும்போது உணவு தானியங்களின் விலைகள் ஏன் உயர வேண்டும் ?

"இதர பண்டங்களைப் பொறுத்த வரையில் சில பண்டங்களின் விஷயத்தில் பற்றாக்குறை ஏற்படலாம். இருப்பினும் விலைகளை உயர்த்துவதற்கான ஒரு சாதகமாக, பற்றாக்குறைகள் பயன்படுத்திக் கொள்ளப்படக்கூடாது. உண்மையில் பற்றாக்குறை ஏற்பட்டால் வியாபாரிகளும், கையிருப்பு வைத்திருப்பவர்களும் சமுதாயத்திடம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டுமே தவிர, இதனைச் சுயநோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. நாட்டில் தற்போது நிலவி வரும் அமைதியான, சுதந்திரமான ஒரு சூழ்நிலையைத் தமக்கு சாதகமாக-தவறாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய எந்தவொரு எண்ணத்தையும் வியாபாரிகள் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் சட்டம், மக்கள், சமுதாயம், அரசாங்கம் இவற்றின் கண்டனத்திற்குள்ளாவார்கள். எந்த ஒரு சமூக விரோதச் செயலையும் கவனிக்க நாட்டில் தற்போதுள்ள சாதாரணச் சட்டமே போதுமானது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். நெருக்கடி நிலை நீக்கப்பட்டதன் பயனாக எந்த ஒரு சமூக விரோதச் செயலுக்கும் அனுமதியோ, அல்லது கடுந் தண்டனையிலிருந்து எவருக்கும் பாதுகாப்போ வழங்கப்படவில்லை என்பதனை நான் உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

"எனவே, அரசாங்கத்தின் நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகும். அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளைப் பற்றிய பொறுப்பு வியாபாரிகளையும், கையிருப்பு வைத்திருப்பவர்களையும் சேர்ந்ததாகும் என்று நாங்கள் நம்புகின்றோம். எனவே, உள்நாட்டில், பற்றாக்குறை ஏற்படாத விதத்தில் பண்டங்களின் விற்பனை, விநியோகம் இவற்றுக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதும், விலைகள் உயருவதற்குப் பதிலாக குறையும்படி செய்ய வேண்டியதும் அவர்களது கடமையும், பொறுப்பும் ஆகும். விலைவாசிகளைக் குறைப்பதற்குப் பதிலாக வியாபாரிகள் விலைகள் உயருவதற்கான சூழ்நிலைகளை செயற்கையாகச் சிருஷ்டிக்கின்றனர். இதற்கு உதவியாக, சமுதாயத்தை வருத்தி, கொள்ளை லாபம் ஈட்டும் நோக்கத்துடன் கையிருப்பு வைத்திருப்பவர்களும் பண்டங்களைப் பதுக்கி வைக்கின்றனர்.

''இதுபோன்ற சமூக விரோதச் செயல்கள் புரியப்படுவதைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்துவிட அரசாங்கத்தால் முடியாது. எந்த ஒரு வியாபாரியும் பண்டங்களைப் பதுக்கி வைத்தல், செயற்கையாக விலையுயர்வைத் தோற்றுவித்தல் போன்ற செயல்களில் ஈடுபடாமல் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் இந்த எச்சரிக்கையைத் தாமதமின்றி ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் சம்பந்தமாக உள்ள கஷ்டங்களையும் குறைபாடுகளையும் நீக்குவதற்குப் பொதுமக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றியாக வேண்டும் என்பதனை வியாபாரிகள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

''அரசாங்கம் பல்வேறு வழிகளில் பொதுமக்களின் சேவைக்கென தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ஒவ்வொரு குடிமகனும் அரசாங்கத்தின் ஆக்கப்பணிகளில் பங்கு பெறவேண்டும். பொருளாதாரத்தின் நிலையான தன்மை, மக்களின் நல்வாழ்வு இவற்றை மனத்தில் கொண்டு பார்க்கையில் நாம் உற்பத்திக்கான நமது முயற்சிகளிலிருந்து ஒருநாள் கூடத் தவறக்கூடாது.

சமூக நீதிப்படி தேசத்தின் நலனுக்கென நாம் ஒவ்வொருவரும் மற்றவரின் சுமைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்; ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நலனுக்கென உதவிக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் உணவு, உடை, இருப்பிட வசதி தேவைப்படும் பல இலட்சக்கணக்கான மக்கள் உள்ளனர். நம் நாட்டில், ஜனத்தொகையும் அதிகரித்து வருகிறது. வரும் ஆண்டுகளில் இப்போதுள்ளதைவிடக் கூடுதலாக உணவு, உடை, இருப்பிட வசதிகள் தேவைப்படலாம். எனவே, நமக்குள் ஒற்றுமை இல்லாவிட்டால் தேசத்தின் ஆக்கப்பணிகளில் நாம் வெற்றி பெற இயலாது. நான் கூறும் அந்த ஒத்துழைப்பு உதட்டளவிலான ஒன்றாக இருத்தல் கூடாது. அது ஒரு பரஸ்பர உதவியாகும்; வறுமையை ஒழிக்கும் பணிகளில் நமக்கு வெற்றியைத் தேடித் தரக்கூடிய ஓர் அர்ப்பணிப்பு ஆகும்.

''எனவே, உற்பத்தி, விலைவாசிகள் பராமரிப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும் நான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். வெற்றிகளை நாம் பெற முடியாமல் நாம் அடையும் தோல்விகள் நம் நாட்டைப் பின் தங்கச் செய்துவிடும் என்பதனை அவர்கள் பூரணமாக உணர வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். ஒவ்வொருவருடைய வாழ்க்கை நிலை எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு குடிமகனும் தனது கடமையைச் சரிவர ஆற்ற வேண்டும் என்றே நாடு எதிர்பார்க்கிறது.''

ஜெய் ஹிந்த்!

**(பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் 19-4-77 அன்று வானொலியில் ஆற்றிய உரை.)**



## கலப்புப் பயிரும் ஊடுபயிரும்

நிலக்கடலையுடன் துவரையைக் கலப்புப் பயிராக 6:1 என்ற விகிதத்தில் சாகுபடி செய்தால் அதிக இலாபம் அடையலாம். கலப்புப் பயிருக்கு கோ. 2 துவரை மிகவும் நல்லது. தென் மாவட்டங்களுக்குக் கம்புப் பயிருடன் துவரை, கொண்டைக் கடலை அல்லது அவரை கலப்புப் பயிராகப் பயிரிட ஏற்றது.

தற்காலத்தே வெளியிட்டுள்ள குறுகிய காலப் பயிர்களாகிய கோ. 2 உளுந்து, கோ. 2, கோ. 3, பச்சைப் பயறு, கோ. 2 துவரை இரகங்கள் கலப்புப் பயிருக்கு மிகவும் உகந்தவை.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 1974—ஆம் ஆண்டு தேசிய ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ்நடத்தியஆராய்ச்சிகளின் பயனாக, மண்ணில் போதுமான ஈரமுள்ள மானாவாரி நிலங்களில் சோளத்தில், கோ. 2 உளுந்து, கோ. 2 பாசிப் பயறு, சி. 152 காராமணி, கோ. 8 அவரை இவற்றில் ஏதாவது ஒன்றை ஊடுபயிர் செய்தால், அதிக இலாபம் அடையலாம் என அறியப்பட்டது. மணற்பாங்கான அல்லது செம்மண் பகுதிகளில் உளுந்து அல்லது பாசிப் பயறும், கரிசல் மண் பகுதிகளில் காராமணி அல்லது அவரை பயிரிடலாம். தென் மாவட்டங்களில் ஐப்பசிப் பட்டத்தில் காராமணி நல்ல பலன் அளிக்கும்.

இவை தவிர பாசிப் பயறு, உளுந்து ஆகிய பயறு வகைகளைக் கரும்பு, மரவள்ளி, பருத்தி, வாழை, சோளம் ஆகிய பயிர்களில் ஊடுபயிர் செய்தால் நல்ல இலாபம் அடையலாம்.



# உயர்விளைச்சல் நெல் சாகுபடியில் புதிய விஞ்ஞான முறைகள்

**1. நாற்றுப் பராமரிப்பு முறைகள் :**

நாற்றங்காலில் தரமான நாற்றுக்களை வளர்க்க வேண்டும். ஏனெனில், தரமான நாற்றுக்களிலிருந்துதான் பெரிதான தூர்களும், கதிர்களும் தோன்றும். தரமான நாற்றுக்களுக்குக் கீழே குறிப்பிட்டுள்ள குணங்கள் இருக்க வேண்டும் :

1. பருமனாகவும், குட்டையாகவும் இருத்தல்.


2 பூச்சி நோய்களினால் தாக்கப்படாமல் இருத்தல்.

3. எல்லா நாற்றுக்களும் ஒரே சீரான வளர்ச்சி உடையனவாக இருத்தல்.

நாற்றங்காலில் சரியான இடைவெளி கொடுப்பதின் மூலமாகவும், குறைவான நீர் பாய்ச்சுவதன் மூலமாகவும், தழைச் சத்தைக்காட்டிலும், மணிச் சத்தையும், சாம்பல் சத்தையும் கூட்டுவதன் மூலமாகவும் நல்ல தரமான, குட்டையான, சரியான வளர்ச்சி பெற்ற நாற்றுக்களைப் பெறலாம். அதிக மணிச் சத்தையும், சாம்பல் சத்தையும் பெற்ற நாற்றுக்கள் பூச்சி, நோய் ஆகியவற்றை எதிர்க்கும் சக்தி உடையனவாக இருப்பதோடு, சாதகமில்லாத நிலைகளிலும் கூட வளர்ச்சி குறைவின்றி இருக்கின்றன எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நாற்றங்காலில் பாத்திகள் அமைக்கும் முன்பே மண்ணில் சமமாக உரங்கள் கலக்கும்படி கடைசி உழவின்போது உரமிட வேண்டும் நாற்றங்கால் பாத்திகளைச் சீராகச் சமன் செய்ய வேண்டும். சரியாகச் சமன்படுத்தப்படாதபாத்திகளிலிருந்து ஒரே சீரான நாற்றுக்களைப் பெறுவது கடினம். நாற்றங்காலில் அதிக ஆழத்தில் விதைத்தலைத் தவிர்க்க வேண்டும்.

**நாற்றுக்களின் வயதைக் காட்டிலும் அவற்றில் உள்ள இலைகளின்**



**எண்ணிக்கையே மிகவும் முக்கியமானது. நான்கு அல்லது ஐந்து இலைகளுள்ள நாற்றுக்களைப் பெறுவதே மிகவும் சிறந்தது.**

**நாற்றுக்களின் நடவு ஆழம் :** அதிக ஆழமாக நடப்படும் நாற்றுக்களைக் காட்டிலும் குறைவான ஆழத்தில் நடப்படும் நாற்றுகள் நல்ல வேர் வளர்ச்சி அடைகின்றன. இதனால் தூர்களின் எண்ணிக்கையும், நெல் விளைச்சலும் அதிகமாக இருக்கிறது. எனவே, நாற்றுகளை அதிக ஆழமில்லாமலேயே நட வேண்டும். அதிக ஆழமாக நட்டால் தூர்களின் எண்ணிக்கை குறைய ஏதுவாகும். தூர் அழுகல் நோய் ஏற்பட வாய்ப்பும் உண்டு.

**நடவு காலம் :** நாற்றுக்களைப் பிடுங்கி நடவு வயலில் நட்ட பின் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் சூரிய வெப்பம் அதிகமாக இருக்கக் கூடாது. இருப்பின் நாற்றுகளின் வேர் வளர்ச்சி பாதிக்கப்படும். எனவே, மாலை வேளைகளில் நடவு வேலையைச் செய்வதின் மூலம் இப்பாதிப்பைத் தவிர்க்கலாம்.

## 2. பயிர்ப் பராமரிப்பு முறைகள்

**தழைச் சத்து உரத்தைத் தேர்ந்தெடுத்தல் :** பலவிதத் தழைச் சத்து உரங்களில், யூரியாவைப் பயன்படுத்துவது நலம். இது அதிகத் தழைச்சத்து உள்ள உரம். யூரியாவை ஈரமுள்ள மண்ணில் கலந்து, நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குப் பின்பு, நிலத்திற்கு இடலாம். இவ்விதமாகச் செய்வதன் மூலம் தழைச் சத்தை மண் எளிதில் பெற்றுக் கொள்ளும். அதிகமாகச் சேதமுமாகாது.

**தழைச் சத்து இடும் காலம் :** நெற் பயிரின் வளர்ச்சிப் பருவத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை :

1. முன் வளர்ச்சிப் பருவம்,
2. மத்திய வளர்ச்சிப் பருவம்,
3. பின் வளர்ச்சிப் பருவம்.

தழைச்சத்தை முன், பின் வளர்ச்சிப் பருவங்களில் தான் இடவேண்டும். மத்திய வளர்ச்சிப் பருவத்தில் இடப்படும் தழைச் சத்து கதிரற்ற தூர்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதால் அந்தப் பருவத்தில் தழைச் சத்து இடுதலைத் தவிர்க்க வேண்டும்.

**தழைச் சத்து உரத்தை வைத்தல் :** அம்மோனியா வடிவில் உள்ள தழைச் சத்தை நிலத்தின் ஆழத்தில் வைப்பதன் மூலம் விளைச்சலை 10 முதல் 20 சதவீதம் பெருக்கலாம். 60 முதல் 80 கிராம் எடையுள்ள மண்ணையும், சம எடையுள்ள யூரியாவையும் கலந்து உருண்டை செய்து, இவ்வுருண்டையை நான்கு குத்துகளுக்கு ஒன்று வீதம், 6 அல்லது 7 செ.மீ. ஆழத்தில் வைக்கும் முறை சிறந்தது. இதை நாற்று நட்ட 10 அல்லது 12 நாட்களில் செய்யலாம்.



**நீர் நிர்வாகம் :** நெல் வயலில் தொடர்ச்சியாக நீர் தேங்கி இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. நீர் பாய்ச்சுவதும் பின்பு காயவிடுவதுமாக மாறி மாறிச் செய்யலாம். தூர் விடும் காலம் வரை இரண்டு முதல் ஐந்து செ.மீ. உயரத்தில் நீரைத் தேக்கி வைத்தல், பின்பு வெடிப்பு தோன்றும் வரை காய விடுதல், ஐந்து செ.மீ. ஆழத்திற்கு நெல் மணி பால் பிடிக்கும் பருவம் வரை நீரை விடுதல் என்ற இந்த முறைகளையும் செய்யலாம். **தொடர்ந்து நீரைத் தேக்கி வைப்பதைக் காட்டிலும், நீர் விட்டுக் காய விடுதலை மாறி மாறிச் செய்வதன் மூலம் 37 சதவீதம் அதிகமான மகசூலைப் பெறலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

## பூச்சி நோய்க் கட்டுப்பாடு :

சரியான நேரங்களில் பூச்சி, நோய்களைத் தடுப்பதன் மூலம் பயிருக்கு ஏற்படும் சேதத்தைத் தவிர்த்து, விளைச்சலைப் பெருக்கலாம்.

**அறுவடை :** பூப்பிடித்த நாளிலிருந்து முதல் முப்பது நாட்களில் நெல் அறுவடைக்கு வந்து விடும். நெல் மணியின் ஈரம் சுமார் 20 சதவீதத்திற்கும் குறையும் பொழுது அறுவடை செய்ய வேண்டும்.

மேலே குறிப்பிட்ட சீரிய சாகுபடி முறைகளைக் கையாளுவதன் மூலம் நெல் விளைச்சலை அதிகமாகப் பெருக்கிப் பயனடையலாம் என்பது உறுதி.

**தகவல் :**

திரு. பா. ராஜேந்திரன்,
திரு. ஞா. ஜேம்ஸ் மார்ட்டின்,
பண்ணை இயந்திரத் துறை,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

**வெளியீடு :**

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.



# முந்திரியைத் தாக்கும் கொடிய நோயும் பூச்சிகளும்

முந்திரி மரத்தைத் தாக்கும் நோய்களுள் பின்கருகல் நோயும் பூச்சிகளுள் தண்டு துளைக்கும் புழு, தேயிலைக் கொசு ஆகியவையும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவையாகும்.

**பின்கருகல் நோய் :**

இது ஒரு பூசண நோய். மழைக் காலத்தில் இந்நோயின் அறிகுறி அதிகமாகும். இந்நோயினால் தாக்கப்பட்ட கிளைகளில் குச்சிகள் முதலில் வெள்ளை நிறமாகவும், பின்பு சிவப்பு நிறமாகவும் மாறும். மரப் பட்டை பிளவு பட்டுக் காய்ந்து உதிர்ந்து விடும்.

**தடுப்பு முறை :**

தாக்கப்பட்டகுச்சிகளை வெட்டி விட்டு 1 சத போர்டோக்கலவை மருந்தை மே-அக்டோபர் மாதங்களில் தெளிக்கலாம்.

**தண்டு துளைப்பான் :**

இது கரும் சிவப்பான வண்டு. மரப் பட்டைகளின் இடுக்கில் இது முட்டையிடும். இதன் புழுக்கள் கிளைகள், தண்டு முதலானவற்றைத் துளைத்துச் சேதம் உண்டாக்கும். இதனால் சிறு கிளைகள் வாடிக் காய்வதும் மரத்தின் இலைகள் மஞ்சளாகி உதிர்வதும் காணப்படும். மேலும் புழு துளைத்த துவாரங்களும் காணப்படும். ஜூலை-டிசம்பர் மாதங்களில் இப்பூச்சி அதிகம் காணப்படும்.

**தடுப்பு முறை :**

காய்ந்த பகுதிகளை வெட்டி விட்டு 'பி. எச். சி.' 50 சத மருந்தை (2 கிராம்/லிட்டர்) மரத்தில் பூச வேண்டும்.

**தேயிலைக் கொசு :**

சிவப்பு நிறமான கொசு போன்றது இப் பூச்சி. இது தேயிலை, கொய்யா, முந்திரி போன்றவற்றைத் தாக்குகிறது. இக் கொசு இளந்தளிர், பூங்கொத்து முற்றாத கொட்டை ஆகியவற்றின் சாற்றை உறிஞ்சி வாழும். சாறு உறிஞ்சும்போது உண்டாகும் நச்சுப் பொருளால் தாக்குண்ட பகுதியான இளம் தளிர், பூங்கொத்து, கொட்டை முதலானவை காய்ந்து விடும். பருவ மழைக்குப் பின்பு மரங்கள் துளிர்க்கும்போது இப் பூச்சியின் தாக்குதல் அதிகம் காணப்படும்.

**தடுப்பு முறை :**


தயோடான் (3 மி.லி./லிட்டர் மருந்தை தளிர் விடும்போதும், (செப்டம்பர்-அக்டோபர்.), பூப் பிடிக்கும் போதும் (நவம்பர்-டிசம்பர்), காய் பிடிக்கும்போதும் (ஜனவரி-பிப்ரவரி) தெளிக்க வேண்டும்.

**தகவல் :**

முந்திரி ஆராய்ச்சி நிலையம்,
விருத்தாசலம்.

**வெளியீடு :**

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3.



# குறைந்த செலவில் சிறந்த தீவனங்கள்!

## கோழித் தீவனமும் மரவள்ளிக் கிழங்கும்

**சோ**ளம், கேழ்வரகு, கம்பு போன்ற தானிய வகைகள் கோழிகள் உணவில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. கோழிகளின் கலப்புத் தீவனத்தில் இத்தானிய வகைகளின் உபயோகத்தைத் தவிர்த்தால் அது மனிதனுக்கு நேரிடையாக உணவாகப் பயன்பட வாய்ப்பு ஏற்படும்.

சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியின் உணவியல் துறையில் நடத்தப் பெற்ற ஆராய்ச்சியின் முடிவாக சோளம், கம்பு, கேழ்வரகு முதலியவற்றுக்குப் பதிலாக மரவள்ளிக் கிழங்கு மாவை கோழித் தீவனமாக உபயோகிக்கலாம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோழிகள் உணவில் உபயோகப்படும் தானியங்களின் அளவில் 30 சத விகிதம் குறைத்து, அதற்கு மாற்றாக மரவள்ளிக் கிழங்கு மாவைப் பயன்படுத்தலாம். இதனால் தானியங்களை மனிதனின் உபயோகத்திற்கு சேமிக்கவும், கோழியின் உணவு விலையைக் குறைக்கவும் முடியும்.


மரவள்ளிக் கிழங்கு மாவைப் போலவே அதன் சக்கையையும் கோழிகளின் தீவனத்தில் இலாபகரமாக உபயோகிக்கலாம் எனவும் ஆராய்ச்சி முடிவுகள் புலப்படுத்துகின்றன. கோழிகள் உணவில் சேர்க்கப்படும் சோளத்தின் அளவில் பாதியைக் குறைத்து அதற்குப் பதிலாக மரவள்ளிக் கிழங்குச் சக்கையைச் சேர்த்து கோழி உணவு தயாரிக்கலாம்.

### கோழி உணவில் புரதச் சத்து:

சாதாரணமாக கோழி உணவில் 20 சத விகிதம் புரதம் போதுமானது என்று பரிந்துரைக்கப்படுகிறது. மாமிசக் கோழிகள் குறுகிய காலத்தில் அதிக வளர்ச்சி அடையும் தன்மை உள்ளதால் அவற்றின் உணவில் எவ்வளவு புரதச் சத்து இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுற அறிய ஒரு குறுகியகால ஆராய்ச்சி நடந்தது. இந்த ஆராய்ச்சியில் 25.23, 21.60 மற்றும் 16.59 சத விகிதப் புரதச் சத்துள்ள மூன்று விதமான கோழி உணவுகள் முறையே மூன்று பிரிவுக் கோழிகளுக்குக் கொடுக்கப்பட்டன. 25.23 சத விகிதம் புரதம் உள்ள கோழி உணவு அந்தப் பிரிவுக் கோழிகளுக்கு நல்ல வளர்ச்சியைக் கொடுத்தது. வசதியும் வாய்ப்பும் உள்ள இடத்தில் கோழி உணவில் உள்ள புரதச் சத்தியின் அளவை அதிகப் படுத்தி நல்ல பலனைக் காண முடியும்.

### குறைந்த செலவில் ஆடுகள் உணவு

பஞ்ச காலங்களிலும், மேய்ச்சலுக்குத் தேவையான நில வசதி







இல்லாதபொழுதும் ஆடுகளுக்குக் கரு. வேலங்காய்களை உணவாகப் பயன்படுத்தலாம். ஆடுகள் கரு வேலங்காய்களைச் சுவைத்து உண்கின்றன.

கருவேலங்காய்களைப் போலவே மாங்கொட்டையில் உள்ள பருப்பையும் ஆட்டிற்கு உணவாகப் பயன்படுத்தலாம். மாங்கொட்டைப் பருப்பு துவர்க்கும் தன்மை உள்ளதானாலும்ஆடுகள்அவற்றை நன்கு சுவைத்து உண்ணுகின்றன. ஓர் ஆடு சராசரியாக 250 முதல் 300 கிராம் வரை இத்தகைய உணவினை புல் உணவுடன் சாப்பிடும்.

**மாட்டுத் தீவனத்தில் கரும்புச் சக்கையின் பயன்:**

சர்க்கரை ஆலைகளில், சாறு பிழியப்பட்ட கரும்புச் சக்கைகள் நிறைய அளவில் கிடைக்கும். இச்சக்கைகளில் 2 சதவீதம் வெல்லப்பாகும், 0.8 சதவீதம் உப்பும் கலந்த கலவையைத் தெளித்து பதப்படுத்தப்பட்ட ஈர உணவாக மாட்டுத் தீவனத்தில் கலந்து பயன்படுத்தலாம். மாடுகள் இவ்வுணவை மிகவும் விரும்பி உண்ணும். இம்முறையினால் வீணாகக் கழிக்கப்படும் கரும்புச் சக்கைகளைச் சிறப்பான முறையில் பயன்படுத்த முடிகின்றது. மேலும் மாட்டுத் தீவனத்திற்கு ஆகும் செலவையும் கணிசமாகக் குறைக்க முடிகின்றது.

தகவல்:

கால்நடைக் கல்லூரி, சென்னை.

வெளியீடு:

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை.

## விடுதி வசதிகள் கொண்ட பள்ளிகளில் பயில்பவர்களுக்கு 500 உபகாரச் சம்பளம்

விடுதி வசதிகள் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட செகண்டரி பள்ளிகளில் கல்வி பயில்பவர்களுக்கு 1977-78ஆம் ஆண்டில் 500 உபகாரச் சம்பளங்களை மத்திய கல்வி, சமூக நல அமைச்சகம் வழங்கும். பெற்றோரது நிகர மாத வருமானம் 500 ரூபாய்க்குமேற்படாமல் இருந்தால் குழந்தைகளின் கல்வித் தகுதி— வாழ்க்கைத் தரம் இவற்றின் அடிப்படையில் இந்த உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படும்.

இந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதியன்று 11 முதல் 12 வயது வரையிலுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கென அகில இந்திய ரீதியில் நடத்தப்படும் ஒரு தேர்வின் மூலம் இந்த உபகாரச் சம்பளம் பெறத் தகுதி வாய்ந்த மாணவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். இத்தேர்வில் பங்கு பெறுவதற்கான மாணவர்களை ஆரம்பத் தேர்வில் அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களும் தெரிவு செய்யும். இந்தத் தேர்வு, ஆங்கிலம், இந்தி— மாணவர்களால் தெரிந்தெடுக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட இதர பிராந்திய மொழிகளில் நடத்தப்படும்.

இந்த உபகாரச் சம்பளங்களில் 50 சதவீதம், மாநில அரசுகள், மற்றும் யூனியன் பிரதேசங்களின் மக்கட் தொகை அடிப்படையில் வழங்கப்படும். மீதமுள்ளவை பற்றி, அகில இந்திய அடிப்படையில் தீர்மானிக்கப்படும். உபகாரச் சம்பளத்தில் 15 சதவீதம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், 5 சதவீதம் பழங் குடிப் பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த உபகாரச் சம்பளம் பெறும் மாணவருக்கு திருப்பியளிக்கப்படாத இதர கட்டாயக் கட்டணங்கள் உட்பட முழு பள்ளிக் கட்டணமும் வழங்கப்படும். இது தவிர, கைச்செலவு, பள்ளிச் சீருடை உட்பட உடைகள் இவற்றுக்கும் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படும் அளவுகளில் நிதியுதவி அளிக்கப்படும். இம்மாணவர்களுக்குப் பயணப் படியும் வழங்கப்படும்.

இந்த உபகாரச் சம்பளம் பெற விரும்புகின்ற மாணவர்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்கள், அல்லது யூனியன் பிரதேசங்களிலுள்ள கல்வி இயக்குநருக்கு, ஜுன் மாதம் 15ஆம் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். எந்த ஒரு விண்ணப்பத்தையும் மத்திய கல்வி சமூகநல அமைச்சகத்திற்கு நேரிடையாக அனுப்பக் கூடாது.

ASSISTANT WORKS MANAGER
TAMIL ARASU PRESS
GOVERNMENT ESTATE
MADRAS-600 002



# விவசாயத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம்!







| | பெரியவர் கூலி ரூ.பை. | சிறியவர் கூலி ரூ.பை. |
|---|---|---|
| ஏர் உழ (சொந்த எருது, கலப்பையுடன்) | 9.00 | — |
| ஏர் உழ (பண்ணையாரின் எருது, கலப்பையுடன்) | 5.00 | — |
| விதை விதைத்தல், நாற்றுப் பறிக்க .... | 5.00 | 3.00 |
| நாற்று நட, களை எடுக்க .... | 3.50 | 2.10 |
| அறுவடை செய்ய .... | 5.00 | 3.00 |
| பால் கறக்க, கோழி வளர்க்க, வரப்பு கழிக்க, எரு சுமக்க, தேனீ வளர்க்க, பயிற்சி பெற்ற பிற பணிகளுக்கு | 5.00 | 3.00 |
| கால்நடை வளர்க்க | 3.50 | 2.10 |
| பயிற்சி பெருத பிற பணிகளுக்கு | 3.50 | |










வேலை நேரம் :
உழவு—5 மணி நேரம்.
பிற பணிகள்—7 மணி நேரம்.

நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைக் குறைத்துக் கொடுப்பது குற்றமாகும்! இக்குற்றத்திற்கு 6 மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது 500 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்!.





வெளியீடு : செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676

# தீ விபத்துக்களைத் தவிர்ப்போம்



குழந்தைகளைத் தீயிடம் நெருங்க விடவேண்டாம்.

படுக்கையில் புகை பிடிக்காதீர்.

சிமினி இல்லாத விளக்குகளை உபயோகிக்கக்கூடாது.

பீடி, சிகரெட் முதலியவைகளை நன்றாக அணைத்து எறியவும்.

சமையல் முடிந்த பிறகு நெருப்பை தண்ணீர் ஊற்றி நன்றாக அணைத்து விடவேண்டும்.

## அலட்சியமே தீ விபத்துக்குக் காரணம்!



தீயைத் தவிர்ப்பது அனைவரின் பொறுப்பு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.